தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

மனுக்கள் குழு
(2011- 2012)

(பதினான்காவது பேரவை)

ஆறாவது அறிக்கை

25–11–2011 ஆம் நாளன்று புதுக்கோட்டை மாவட்டத்தில் நடைபெற்ற மனுக்கள் குழுக் கூட்டத்தில் ஆய்வு செய்யப்பட்ட மனுக்கள் குறித்த அறிக்கை.

(பேரவைக்கு அளிக்கப்பெற்ற நாள் : 17 APR 2012)

சட்டமன்றப் பேரவைச் செயலகம்,
சென்னை – 600 009.


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

மனுக்கள் குழு

(2011 - 2012)

(பதினான்காவது பேரவை)

ஆறாவது அறிக்கை

25–11–2011 ஆம் நாளன்று புதுக்கோட்டை மாவட்டத்தில் நடைபெற்ற மனுக்கள் குழுக் கூட்டத்தில் ஆய்வு செய்யப்பட்ட மனுக்கள் குறித்த அறிக்கை.


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

பொருளடக்கம்

		பக்கங்கள்
1.	குழு உறுப்பினர்கள்	iii
2.	அறிக்கை	v
	இணைப்பு-I	1–22
	இணைப்பு-II	23–54
	இணைப்பு-III	55–65

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

மனுக்கள் குழு

(2011-2012)

(பதினான்காவது பேரவை)

(2011–ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 3–ஆம் நாள் நியமனம் செய்யப்பெற்றது.)

தலைவர்

1. திரு. ப. மோகன்,
   அரசு தலைமை கொறடா

உறுப்பினர்கள்

2. திரு. ஆர். அருள்செல்வன்
3. திரு. பா. கணேசன்
4. திரு. ஆர். என். கிட்டுசாமி
5. திரு. எஸ்.எஸ். சிவசங்கர்
6. திரு. டி. சுரேஷ்குமார்
7. திரு. ந. நஞ்சப்பன்
8. திரு. கே. பொன்னுசாமி
9. திரு. ஆ. ராமசாமி
10. திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி

* 11. டாக்டர் த. ஹரிதாஸ்

செயலகம்

திரு. அ.மு.பி. ஜமாலுதீன் .. செயலாளர்

திருமதி கு. இந்துமதி .. துணைச் செயலாளர்

திரு. மா. கோபாலகிருஷ்ணன் .. சார்புச் செயலாளர்.

---

* (13–01–2012 முதல்)


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

மனுக்கள் குழு

(2011-2012)

(பதினான்காவது பேரவை)

ஆறாவது அறிக்கை

முன்னுரை

2011-2012-ஆம் ஆண்டிற்கான மனுக்கள் குழுவின் ஆறாவது அறிக்கையினை மனுக்கள் குழுவின் தலைவராகிய நான் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

குழுவின் கூட்டம்

14-07-2011-ஆம் நாளன்று சென்னையில் நடைபெற்ற மனுக்கள் குழுக் கூட்டத்தில் புதுக்கோட்டை மாவட்ட பொது மக்களிடமிருந்து பெறப்பட்ட மனுக்களை ஆய்வு செய்ய 25-11-2011-ஆம் நாளன்று புதுக்கோட்டை மாவட்டத்தில் குழுவின் கூட்டத்தை நடத்த முடிவு செய்யப்பட்டது. அம்மாவட்ட பொது மக்களிடமிருந்து பெறப்பட்ட 205 மனுக்களில், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் விதிகளுக்குட்பட்டிருந்த 97 மனுக்கள் புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டு அறிக்கைகள் கோரப்பட்டன. அறிக்கைகள் பெறப்பட்ட மனுக்களில் 70 மனுக்கள் தெரிவு செய்யப்பட்டு, அவற்றிற்கு விரிவான பதிலறிக்கைகள் தயாரிக்குமாறு மாவட்ட ஆட்சித் தலைவர் கேட்டுக் கொள்ளப்பட்டார்.

2011 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 25 ஆம் நாளன்று புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்திலுள்ள மாவட்ட வளர்ச்சி மன்றக் கூடத்தில் குழு கூடியது.

புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித் தலைவர், திருமதி ப. மகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில் புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள சம்பந்தப்பட்ட அரசுத்துறை அலுவலர்கள் குழு முன் பதிலளித்தனர். சம்பந்தப்பட்ட மனுதாரர்களும் தங்கள் கோரிக்கைகளை வலியுறுத்தினர்.

தெரிவுசெய்யப்பட்ட 70 மனுக்களைக் குழு ஆய்வு செய்தது. அவற்றுள் 25 மனுக்கள் குறித்து குழு தனது பரிந்துரைகளை அளித்தது. 35 மனுக்கள் மீது அரசுத் துறைகளால் அளிக்கப்பெற்ற பதிலுரைகள் படித்துப் பதிவு செய்யப்பெற்றன. மீதமுள்ள 10 மனுக்களுக்கான துறைகளின் பதிலுரைகளை ஏற்று அவை நிறைவேற்றப்பெற்றதாகக் கருதலாம் எனக் குழு முடிவு செய்தது.


குழு பரிந்துரை அளித்த மனுக்களின் விவரங்கள் இணைப்பு-I-இல் அளிக்கப்பட்டுள்ளன. படித்துப் பதிவு செய்யப்பெற்ற மனுக்களின் விவரங்கள் இணைப்பு-II-இல் அளிக்கப்பட்டுள்ளன. நிறைவேற்றப்பெற்றதாகக் கருதப்பட்ட மனுக்களின் விவரங்கள் இணைப்பு-III-இல் அளிக்கப்பட்டுள்ளன.

11-4-2012ஆம் நாளன்று சென்னையில் நடைபெற்ற கூட்டத்தில் இவ்வறிக்கைக்குக் குழு தனது ஒப்புதலை அளித்துள்ளது.

சென்னை- 600 009,
11-04-2012,
பங்குனி திங்கள் 29ஆம் நாள்,
திருவள்ளுவர் ஆண்டு-2043.

ப. மோகன்,
தலைவர்,
மனுக்கள் குழு.


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS



இணைப்பு–I

குழுவினால் பரிந்துரை வழங்கப்பட்ட மனுக்கள் குறித்த விவரங்கள்


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு–I

குழுவினால் பரிந்துரை செய்யப்பட்ட மனுக்கள் குறித்த விவரங்கள்

வரிசை எண்.	மனு எண்	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
1	1141	டாக்டர். எம். நடனம், தலைவர், ரோட்டரி கிளப் புதுக்கோட்டை கிரௌன் சிட்டி, புதுக்கோட்டை.	புதுக்கோட்டை மாவட்டம் திருமயம் தாலுக்கா, பேரையூர்–மல்லாங்குடி கிராமங்களை இணைக்கும் மூன்று கிலோமீட்டர் இணைப்பு சாலையில், வனச்சரக பகுதியில் இருக்கும் ஒரு கிலோ மீட்டர் தூரத்தை, வனத்துறையின் அனுமதி பெற்று இணைப்பு தார் சாலை அமைத்து தரக் கோருதல்.

துறையின் பதிலுரை	குழுவின் பரிந்துரை
(5)	(6)
திருமயம் தாலுகா, பேரையூர்–மல்லாங்குடி கிராமங்களை இணைக்கும் சாலையின் மொத்த நீளம் 2975 மீட்டர் ஆகும். முதல் 600 மீட்டர் தார் சாலை மிகவும் பழுதடைந்துள்ளது. இரண்டாவது 600 மீட்டர் முதல் 1190 மீட்டர் வரை உள்ள பகுதி வனச்சரக பகுதி (Reserve Forest) ஆக உள்ளது. மூன்றாவது 1190 மீட்டர் முதல் 1830 மீட்டர் வரை உள்ள பகுதி வனச்சரக பகுதி (Reserve Forest) ஆக உள்ளது. வனச் சரக பகுதியில் சாலை அமைக்க அனுமதி கேட்டு உரிய படிவத்தில் முன் மொழிவுகள் வனச்சரக அலுவலத்திற்கு ந.க. எண் அ6/2297/2011 நாள்: 16–11–2011இன்படி அனுப்பப்பட்டுள்ளது. வனத்துறை அனுமதி பெற்று இப்பகுதியில் தார்சாலை அமைக்கப்படும். [ஆணையர், ஊராட்சி ஒன்றியம், திருமயம் அவர்களின் கடித எண் அ6/2297/2011 நாள்: 16–11–2011.]	திருமயம் வட்டம் பேரையூர்–மல்லாங்குடி கிராமங்களை இணைக்கும் இணைப்புச்சாலையில், வனத்துறைக்குச் சொந்தமான இடத்தை புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் நேரில் ஆய்வு செய்து, தார்ச்சாலை அமைக்க உரிய நடவடிக்கை எடுக்க குழு பரிந்துரை செய்கிறது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
2	1148	டாக்டர். அமைதி, சமூக ஆர்வலர், கிள்ளுக்கோட்டை–622 502, குளத்தூர் தாலுகா, புதுக்கோட்டை மாவட்டம்.	கிள்ளுக்கோட்டை கிராமத்தில் புதிய அரசு ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க கோருதல்.

துறையின் பதிலுரை

(5)

கிள்ளுக்கோட்டை கிராமத்தில் அருகாமையிலேயே 4 கிலோ மீட்டர் தொலைவில் விசலிக்கோயில் ஆரம்ப சுகாதார நிலையம் உள்ளது. மேலும் கிள்ளுக்கோட்டைக் கிராமத்தின் மக்கள் தொகை 1974 ஆகும். அரசு விதிமுறைகளின்படி, 8 கி.மீ. சுற்றளவுக்குள் ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் மட்டுமே அமைக்க முடியும். மனுதாரர் தெரிவிக்கும் கிள்ளுக்கோட்டை கிராமம் 4 கி.மீ. தொலைவில் உள்ள விசலி கிராம ஆரம்ப சுகாதார நிலையத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

எனவே, இங்கு புதிதாக ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க சூழ்நிலை எழவில்லை.

[துணை இயக்குநர் சுகாதாரப்பணிகள், புதுக்கோட்டை அவர்களின் கடித எண் அ9/489/2009 நாள்: 17–11–2011.]

குழுவின் பரிந்துரை

(6)

மக்கள் தொகைக்கு ஏற்ப பிற்காலத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கலாம் என்றும் அதுவரை மனுதாரர் கிராமத்திற்கு நடமாடும் மருத்துவக்குழுவினை அனுப்பி வைக்க வேண்டுமென்றும் துணை இயக்குநர், சுகாதாரப்பணிகள், புதுக்கோட்டை அவர்களுக்கு குழு பரிந்துரை செய்கிறது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
3	1155	திரு. இராம. பத்மநாதன், திரு. கே. விஜயன், தபெ. கருப்பையா (லேட்) மற்றும் கிராம பொதுமக்கள் உதயம் சுய உதவி குழு மற்றும் இளைஞர்கள், பாண்டிக்குடி, பணங்குளம் அஞ்சல், அறந்தாங்கி தாலுகா, புதுக்கோட்டை மாவட்டம்–614 624.	பெரியாளூர் பாண்டிக்குடி கிராமத்தில் ஆழ்குழாய் கிணறு அமைத்து தரக் கோருதல்

துறையின் பதிலுரை

(5)

பெரியாளூர் ஊராட்சி பாண்டிக்குடி கிராமத்தில் சுமார் 690 பொதுமக்கள் வசித்து வருகின்றனர்.

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் விவரம்

1. பாண்டிக்குடி – 30,000 லிட்டர்.
2. பிள்ளையார்குடியிருப்பு – 30,000 லிட்டர்.

சிறு மின் விசையிறைப்பான் விவரம்

பாண்டிக்குடி – 1
முருங்கைகொல்லை – 1
பிள்ளைபார்கோவில் – 1

கைபம்பு விவரம்

பாண்டிக்குடி –1

இப்பகுதிகளில் நீர் ஆதாரம் உள்ளது. ஒரு நாளைக்கு ஒரு நபருக்கு 40 லிட்டர் தண்ணீர் (LPCD) என்னும் அளவில் போதிய அளவு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

[வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ) ஊராட்சி ஒன்றியம், அறந்தாங்கி அவர்களின் கடித எண் அ7/0029/2011 நாள்: 5–9–2011.]

குழுவின் பரிந்துரை

(6)

பாண்டிக்குடி கிராமத்தில் ஆழ்குழாய் கிணறு அமைத்து, மின் விசையிறைப்பானுடன் கூடிய சிறு மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி அமைத்துத்தர நடவடிக்கை எடுக்குமாறு அறந்தாங்கி, ஊராட்சி ஒன்றிய ஆணையருக்குக் குழு பரிந்துரை செய்கிறது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
4	1156	திரு. பி. வாசுதேவன், முன்னாள் ஒன்றியக்குழு உறுப்பினர், திருநாளூர், அறந்தாங்கி ஒன்றியம்.	பழுதடைந்த தாய்சேய் நல விடுதிக்கு புதிய கட்டிடம் வேண்டுதல்.

துறையின் பதிலுரை	குழுவின் பரிந்துரை
(5)	(6)
திருநாளூர் துணை சுதாதார மைய கட்டிடம் மிகவும் பழுதடைந்து உபயோகமற்றதாகிவிட்டது. எனவே, திருநாளூர் துணை சுகாதார நிலையத்திற்கு புதிய கட்டிடம் கட்ட சட்டமன்ற உறுப்பினர் தொகுதி நிதியிலிருந்து போதிய நிதி ஒதுக்கீடு செய்து தருமாறு இவ்வலுவலகம் மூலமாக கேட்கப்பட்டுள்ளது. இருப்பினும் திருநாளூர் துணை சுகாதார மைய பகுதிக்குட்பட்ட 3 கி.மீ. அருகிலேயே ஆவணத்தான்கோட்டை கிராமத்தில் கிராம சுகாதார செவிலியர் தங்கி பணிபுரிந்து வருகிறார்.	சட்டமன்ற உறுப்பினரின் நிதியைப் பெற்று திருநாளூர் துணை சுகாதார நிலையத்திற்கு புதிய கட்டிடம் கட்ட துணை இயக்குநர் சுகாதாரப்பணிகள், புதுக்கோட்டை அவர்களுக்கு குழு பரிந்துரை செய்கிறது.
[துணை இயக்குநர், சுகாதாரப்பணிகள் மற்றும் குடும்ப நலம், புதுக்கோட்டை அவர்களின் கடித எண் 2542/அ1/2011 நாள்: 5–9–2011.]	

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
5	1158	திரு. ஏ. ராஜேந்திரன், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி ஒன்றிய செயலாளர், விஜயபுரம்.	மன்னக்குடி ஊராட்சியில் மன்னக்குடி கிராமத்தில் கல்லணை கால்வாய் ஆற்றின் குறுக்கே 1935ம் ஆண்டில் கட்டப்பட்ட பழுதடைந்த இரண்டு குறுகிய பாலங்களுக்கு பதிலாக புதிய பாலம் கட்டித்தரக் கோருதல்.

துறையின் பதிலுரை	குழுவின் பரிந்துரை
(5)	(6)
மன்னக்குடி ஊராட்சியில் மன்னக்குடி கிராமத்தில் கல்லணை கால்வாய் பொதுப் பணித்துறை கல்லணைக் கால்வாய் பராமரிப்பில் இருந்து வருவதால் மேற்கண்ட மனு தொடர்புடைய பொதுப்பணித்துறைக்கு அனுப்பப்பட்டுள்ளது. பொதுப் பணித்துறையினரிடம் இருந்து உரிய அறிக்கை பெற்று பாலம் கட்டிக் கொடுக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.	மன்னக்குடி ஊராட்சியில் மன்னக்குடி கிராமத்தில் கல்லணை கால்வாய் ஆற்றின் குறுக்கே புதிய பாலம் அமைக்க உரிய நடவடிக்கை எடுக்குமாறு மாவட்டத் திட்ட அலுவலர் மற்றும் அறந்தாங்கி வட்டார வளர்ச்சி அலுவலருக்கு குழு பரிந்துரை செய்கிறது.
[வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ) ஊராட்சி ஒன்றியம், அறந்தாங்கி அவர்களின் கடித எண் அ7/0029/2011 நாள்: 5–9–2011.]	

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
6	1159	திரு. எஸ். குமரேசன், ஆவணத்தான்கோட்டை.	புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி ஊராட்சி ஒன்றியம் ஆவணத்தான் கோட்டையிலிருந்து கீழக்குடியிருப்பு, மேலக்குடியிருப்பு, மேலக்காடு, திருநாளூர் தெற்கு வழியாக சிட்டங்காடு செல்லும் கிராவல், மெட்டல் மற்றும் மண்சாலையாக உள்ள 4 கிலோ மீட்டர் சாலையை தார் சாலையாக மேம்பாடு செய்யக் கோருதல்.

துறையின் பதிலுரை

(5)

புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி ஊராட்சி ஒன்றியம் ஆவணத்தான் கோட்டையிலிருந்து கீழக்குடியிருப்பு, மேலக்குடியிருப்பு, மேலக்காடு, திருநாளூர் தெற்கு வழியாக சிட்டங்காடு செல்லும் கிராவல், மெட்டல் மற்றும் மண்சாலையாக உள்ள 5.00 கிலோ மீட்டர் சாலையை தார் சாலையாக மேம்பாடு செய்யக்கோரும் பணி நபார்டு திட்டத்தில் முன்னுரிமைப் பட்டியில் 1–ல் வ.எண் 3–ல் சேர்க்கப்பட்டள்ளது. இதன் மதிப்பீடு ரூ. 236.00 லட்சம் ஆகும். இதற்கான கருத்துரு சென்னை ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் ஆணையருக்கு இவ்வலுவலக கடித எண் ஜி/2585/2011 நாள் 14–11–2011–ன்படி சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

அரசாணை பெறப்பட்டவுடன் மேற்கண்ட பணியினை செயல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

[ஆணையர், ஊராட்சி ஒன்றியம், அறந்தாங்கி அவர்களின் கடித எண் அ2/1385/2010, நாள்: 16–11–2011.]

குழுவின் பரிந்துரை

(6)

அறந்தாங்கி ஊராட்சி ஒன்றியம், ஆவணத்தான் கோட்டையிலிருந்து சிட்டங்காடு செல்லும் சாலையை தார்சாலையாக முன்னுரிமை அடிப்படையில் அமைக்கக் குழு பரிந்துரை செய்கிறது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் கருக்கம்.
(1)	(2)	(3)	(4)
7	1162	திரு. அ. செல்லையா, கே. தெற்குவீதி, சுப்பிரமணியபுரம் 614 805, அறந்தாங்கி வட்டம், புதுக்கோட்டை.	அறந்தாங்கி வட்டம், சுப்பிரமணியபுரம் கிராமத்தில் அரசு சீர்மரபினர் மாணவர் விடுதி ஒன்றும், மாணவியர் விடுதி ஒன்றும் புதிதாக துவங்க கோருதல்.

துறையின் பதிலுரை	குழுவின் பரிந்துரை
(5)	(6)
சுப்பிரமணியபுரம் கிராமத்தில் தற்போது இயங்கி வரும் பிற்பட்ட வகுப்பு மாணவர் விடுதியில் 65 மாணவர்களும், அரசு பிற்பட்ட வகுப்பு மாணவியர் விடுதியில் 66 மாணவிகளும் உள்ளனர். இந்நிலையில் மனுதாரரின் கோரிக்கை அடிப்படையில் சுப்ரமணியபுரம் கிராமத்தில் சீர்மரபினர் மாணவர் விடுதி கட்ட இவ்வலுவலக ந.க. 17299/2011/எம்.1 நாள்: 11–09–2011–இல் சென்னை பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையருக்கு பிரேரணைகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. 12–11–2011 அன்று கடைசியாக நினைவூட்டு அனுப்பப்பட்டுள்ளது. சுப்பிரமணியபுரம் கிராமத்தில் சீர்மரபினர் மாணவியர் விடுதி கட்டவும் இவ்வலுவலக ந.க. 17299/2011/எம்.1 நாள்: 11–09–2011–இல் சென்னை பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையருக்கு பிரேரணைகள் அனுப்பி வைக்கப்பட்டு கண்காணிக்கப்பட்டு வருகிறது. [மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர், புதுக்கோட்டை அவர்களின் கடித எண்.17299/2011/எம்.1 நாள்: 11–09–2011.]	விடுதி கட்டும் பணிப்பட்டியலில் அடுத்த ஆண்டு இதனை சேர்த்து பணியை மேற்கொள்ள குழு பரிந்துரை செய்கிறது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
8	1163	திரு. அ. சண்முகம் (நேரு), குளமங்கலம் வடக்கு (அஞ்சல்), கீரமங்கலம் (வழி), ஆலங்குடி வட்டம், புதுக்கோட்டை மாவட்டம்.	1. அறந்தாங்கி–ஆலங்குடிக்கு இயக்கப்படும் தடம் எண் 22 பேருந்து முழு நேரமும் குலமங்கலம் வடக்கு வழியாக இயக்க கோருதல். 2. புதுக்கோட்டை–பேராவூரணி செல்லும் அரசுப் பேருந்து குளமங்கலம் வடக்கு வழியாக முழு நேரமும் இயக்க கோருதல்.

துறையின் பதிலுரை

(5)

1. தடம் எண் 22 பேருந்து காலை, மாலை நேரங்களில் பள்ளி மாணவர்கள் வசதிக்காக இவ்வழித்தடத்தில் இயக்கப்படுகிறது. காலை,மாலை நேரத்தில் பயணிகள் பயன்பாடு அதிகமாக தேவைப்படும் நேரத்திலேயே பயணிகளின் பயன்பாடு (OR-Occupancy Ratio) 48.6 சதவீதமே உள்ளது. எனவே, இவ்வழித்தடத்தில் தற்பொழுது கூடுதல் நடைகள் இயக்க இயலாத நிலை உள்ளது. மேலும் இப்பேருந்து பல்முனைத்திட்டத்தின்கீழ் 4 வழித்தடத்தில் இயக்கப்படுகிறது. எனவே இப்பேருந்தினை முழுநேரப் பேருந்தாக மாற்றி இயக்க இயலாத நிலை உள்ளது.

2. இவ்வழித்தடத்தில் 2 நடைகள் பேருந்து இயக்கப்படுகிறது. தற்போது மனுதாரரின் கோரிக்கையை ஏற்று இவ்வழித்தடத்தில் மாலை நேரத்தில் மேலும் 2 நடைகள் கூடுதலாக இயக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. அதாவது நடப்பாண்டிற்குரிய புதிய வழித்தட அனுமதியில் மேற்படி இரண்டு நடைகளும் வரும் டிசம்பர் மாத கடைசி வாரத்தில் இயக்கப்படும்.

[பொது மேலாளர், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கும்பகோணம்) லிமிடெட், புதுக்கோட்டை மண்டலம் அவர்களின் கடித எண் தஅபோக/கும்ப/பும/வ2/1319, நாள்: 3–9–2011.]

குழுவின் பரிந்துரை

(6)

அறந்தாங்கியிலிருந்து பேருந்து இயக்கப்படும் வழித்தடங்களில் கூடுதலாக நடைகள் இயக்க உரிய நடவடிக்கை எடுக்குமாறு புதுக்கோட்டை அரசு போக்குவரத்துக் கழக பொது மேலாளருக்குக் குழு பரிந்துரை செய்கிறது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
9	1166	டாக்டர். அமைதி, கிள்ளுக்கோட்டை, குளத்தூர் வட்டம், புதுக்கோட்டை மாவட்டம்.	புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி அருள்மிகு வீரமாகாளியம்மன் திருக்கோவில் குளத்தை தூர்வாரி கழிவு நீர் கலக்காமல் தடுப்பணை அமைத்து பராமரிக்க கோருதல்.

துறையின் பதிலுரை.	குழுவின் பரிந்துரை.
(5)	(6)
புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி நகரில் உள்ள அருள்மிகு வீரமாகாளியம்மன் திருக்கோவிலுக்கு சொந்தமான குளத்தில் ஏலதாரர் கால்நடை கழிவுகள் கொட்டாமல் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது. மேற்படி திருக்குளத்தை தூர்வார ரூ. 2,58,750/–க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேலும் சுற்றுச்சுவர் கட்ட ரூ.11,70,000–க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. திருக்கோயிலில் நிதி வசதி இல்லாத காரணத்தால், இப்பணிகளை, வளர்ச்சித்துறையுடன் இணைந்து, அறந்தாங்கி திருக்கோவில் மண்டகப்படிதாரர்களின் நன்கொடை, மற்றும் வர்த்தகசங்கமும் ரோட்டரி கிளப்பும் சேர்ந்து விரைந்து மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது. [உதவி ஆணையர், இந்து சமய அறநிலையத்துறை, புதுக்கோட்டை அவர்களின் கடித எண். ந.க.3260/2011/அ2, நாள் 17–11–2011]	புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி அருள்மிகு வீரமாகாளியம்மன் திருக்கோவில் குளத்தை சுகாதாரமான முறையில் வைத்திருக்க உரிய நடவடிக்கை எடுக்குமாறு உதவி ஆணையர், இந்து சமய அறநிலையத் துறை, புதுக்கோட்டை அவர்களுக்குக் குழு பரிந்துரை செய்கிறது.

வரிசை எண்.	மனு எண்	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
10	1167	திரு. த. பாபு, வழக்கறிஞர், 78, செளராஸ்டிரா தெரு, பெரியகடை வீதி, இலுப்பூர் அஞ்சல் மற்றும் தாலுகா, புதுக்கோட்டை மாவட்டம்.	திருச்சிராப்பள்ளி மண்டலம் – புதுக்கோட்டை மாவட்டம் – இலுப்பூர் தேர்வுநிலை பேரூராட்சியில் உள்ள பேருந்து நிலையத்தை மாற்றி புதிய நவீன வசதிகளுடன் பேருந்து நிலையம் அமைக்க கோருதல்.

துறையின் பதிலுரை.	குழுவின் பரிந்துரை.
(5)	(6)
திருச்சிராப்பள்ளி மண்டலம், புதுக்கோட்டை மாவட்டம், இலுப்பூர் தேர்வுநிலை பேரூராட்சியில் பேருந்து நிலையம் அமைத்திட ஒருங்கிணைந்த நகர்ப்புற கட்டமைப்புத் (2012–13) திட்டத்தின் கீழ் ரூ.75.00 இலட்சம் மதிப்பீட்டில் முன் மொழிவுகள் தயார் செய்யப்பட்டு, இவ்வலுவலக கடிதம் ந.க.2864/2011, நாள்: 12–11–2011–இன்படி சென்னை பேரூராட்சிகளின் இயக்குநர் அவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது. சென்னை பேரூராட்சிகளின் இயக்குநர் அவர்களிடமிருந்து நிர்வாக அனுமதி பெறப்பட்டவுடன் பணி தொடங்கப்படும். [பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்(பொ), திருச்சிராப்பள்ளி மண்டலம் அவர்களின் கடித எண். 2864/2011/பே1, நாள் 16–11–2011]	புதுக்கோட்டை மாவட்டம் இலுப்பூர் தேர்வுநிலை பேரூராட்சியில் உள்ள பேருந்து நிலையத்தை மாற்றி புதிய நவீன வசதிகளுடன் கூடிய பேருந்து நிலையம் அமைக்க அரசுக்கு குழு பரிந்துரை செய்கிறது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
11	1168	திரு. த. மோகன்ராஜ், த/பெ. தண்டாயுதம், எல்–245, பூங்கா நகர், புதுக்கோட்டை.	பூங்காநகர் மற்றும் அதை சுற்றியுள்ள பகுதிக்கு மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி அமைத்து பாதுகாக்கப்பட்ட காவிரி குடிநீர் வழங்கக் கோருதல்.

துறையின் பதிலுரை.

(5)

பூங்காநகர் பகுதிக்கு அம்மையாப்பட்டியிலிருந்து வெள்ளாறு குடிநீர் இப்பகுதியில் அமைக்கப்பட்டுள்ள தரைமட்ட தொட்டி மூலம் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், இப்பகுதி மக்களின் வேண்டுகோளின்படி 12 இடங்களில் பொதுக்குழாய்கள் அமைக்கப்பட்டு அதன்மூலம் காவிரி குடிநீரும் வழங்கப்பட்டு வருகிறது.

மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி அமைத்து அதன்மூலம் முழுமையாக காவிரி குடிநீர் வழங்குவதற்கு ரூ.36.00 இலட்சம் செலவில் மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு அடிப்படை கட்டமைப்பு மேம்பாடு நிதி 2011–12–இன்கீழ் நிதி ஒதுக்கீடு வழங்கிட கோரி நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களுக்கு இவ்வலுவலக ந.க.28918/2011, நாள் 15–11–2011–இன்படி கருத்துருக்கள் அனுப்பப்பட்டுள்ளது.

எனினும் மனுதாரரின் நியாயமான கோரிக்கையின் பேரில் இப்பகுதியில் நிதி ஒதுக்கீடு வரப்பெற்றவுடன் மேற்படி பகுதியில் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி அமைத்து காவிரி குடிநீர் விநியோகம் செய்யப்படும்.

[ஆணையர், புதுக்கோட்டை நகராட்சி அவர்களின் கடித எண். 18923/2011/இ3, நாள்: 8–11–2011]

குழுவின் பரிந்துரை.

(6)

மாவட்ட ஆட்சித் தலைவரின் வழிகாட்டுதல் பெற்று விரைவில் அப்பகுதியில் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி அமைத்து காவிரி குடிநீர் விநியோகம் செய்யவேண்டுமென குழு பரிந்துரைக்கிறது.

10

வரிசை எண்.	மனு எண்	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
12	1173	திரு. சண்முகம், குளமங்கலம் வடக்கு அஞ்சல், கீரமங்கலம் வழி, ஆலங்குடி வட்டம், புதுக்கோட்டை மாவட்டம்.	புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி தாலுகா குளமங்கலம் வடக்கு கிராமத்தில் கால்நடை கிளை நிலையம் அமைக்க கோருதல்.

துறையின் பதிலுரை

(5)

பசுவினம்	–	2385
எருமையினம்	–	10
செம்மறியாடுகள்	–	95
வெள்ளாடுகள்	–	209
கோழிகள்	–	240
மொத்தம்	–	2939 அலகுகள்.

புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி வட்டம் குளமங்கலம் வடக்கு கிராமத்தில் 18–வது கால்நடை கணக்கெடுப்பின்படி ஒரு கிளை நிலையம் அமைத்திட அலகுகளின் எண்ணிக்கை போதுமானதாக இல்லை என்பதாலும் குளமங்கலம் வடக்கு கிராமத்திற்கு கொத்தமங்கலம் கால்நடை மருந்தகத்தின் மூலம் கால்நடைகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. குளமங்கலம் வடக்கு கிராமத்தின் அருகில் கொத்தமங்கலம் கால்நடை மருந்தகம் 5 கி.மீ. தொலைவிலும், மற்றும் ஆவணத்தான்கோட்டை கால்நடை கிளை நிலையம் 7 கி.மீ தொலைவிலும், மற்றும் மறமடக்கி கால்நடை மருந்தகம் 5 கி.மீ. தொலைவிலும், மற்றும் கீரமங்கலம் கால்நடை மருத்துவமனை 5 கி.மீ. தொலைவிலும் உள்ளது. அரசு விதிமுறைகளின்படி ஒரு கால்நடை மருந்தகத்திற்கும் 8 கி.மீ. இருக்க வேண்டும். எனவே குளமங்கலம் வடக்கு கிராமத்தில் புதியதாக ஒரு கிளை நிலையம் தோற்றுவிக்க சாத்தியக்கூறுகள் ஏதுமில்லை. அவ்வப்போது கால்நடைப் பாதுகாப்புத்திட்ட முகாம்கள் மட்டுமே நடத்திட சாத்தியக் கூறுகள் உள்ளது.

[உதவி இயக்குநர் (கூ.பொ.), கால்நடை பராமரிப்பு, புதுக்கோட்டை அவர்களின் கடித எண். ந.க. 77/ஈ/2011, நாள் 14–10–2011]

குழுவின் பரிந்துரை.

(6)

குளமங்கலம் வடக்கு கிராமத்திற்கு வாரம் ஒரு முறை நடமாடும் கால்நடை மருந்தகம் அனுப்ப உரிய நடவடிக்கை எடுக்க புதுக்கோட்டை, கால்நடை பராமரிப்பு உதவி இயக்குநருக்கு குழு பரிந்துரை செய்கிறது.

வரிசை எண்.	மனு எண்	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
13	1177	திரு. ஆர். சிவசாமி கண்டியர், பா.ஜ.க, மாவட்ட செயலாளர், சத்தியமாங்கலம், புதுக்கோட்டை மாவட்டம்.	சத்தியமாங்கலம் மற்றும் சுற்றுப்புற கிராம மக்கள் மற்றும் பள்ளி மாணவ, மாணவிகள் செல்வதற்கு சத்தியமாங்கலத்திற்கு பேருந்து வசதி கோருதல்.

துறையின் பதிலுரை.

(5)

சத்தியமங்கலம் பேருந்து நிறுத்தம், திருச்சி–புதுக்கோட்டை பிரதான சாலையில் உள்ள இந்நிறுத்தத்திற்கு அருகில் பிரதானசாலையில் பொறியியல் கல்லூரி, பாலிடெக்னிக் கல்லூரி ஆகியவை உள்ளது. இக்கல்லூரிகள் செல்லும் மாணவ மாணவியர்கள் இந்நிறுத்தத்தில் இறங்கி செல்கின்றனர். இப்பேருந்து நிறுத்தம் வழியாக இயக்கப்படும் பேருந்துகள் மூலம் 624 நடைகள் இயக்கப்படுகிறது. மேலும் சத்தியமங்கலம் கிராமம் என்பது பிரதான சாலையிலிருந்து 0.8 கி.மீட்டர் தொலைவில் உள்ளது. பிரதான சாலை வழியாக இயக்கப்படும் பேருந்துகள் சத்தியமங்கலம் உள்ளே சென்று வர அனுமதித்தால் நேரடி பயணிகள் இப்பேருந்துகளில் பயணம் செய்ய விரும்ப மாட்டார்கள். மேலும் அரசு விதிகளின்படி பிரதான சாலையிலிருந்து ஒரு கி.மீட்டருக்குள் உள்ள கிராமம் பேருந்து வசதி பெற்ற கிராமமாக கருதப்படுவதால் சத்தியமங்கலம் கிராமம் பேருந்து வசதி பெற்ற கிராமமாக கருதப்படுகிறது.

[பொது மேலாளர், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கும்பகோணம்) லிமிடெட், புதுக்கோட்டை மண்டலம் அவர்களின் கடித எண். தஅபோக/கும்ப/ பம/வ2/1318, நாள் 3–9–2011]

குழுவின் பரிந்துரை.

(7)

சத்தியமங்கலம் மற்றும் சுற்றுப்புற கிராம மக்கள் பயன்பெறும் வகையில், புதிய தடமாக, இத்தடத்தையும் சேர்த்து, பேருந்து வசதி செய்துதர நடவடிக்கை எடுக்க புதுக்கோட்டை மண்டல, தமிழ்நாடு அரசு போக்குவரத்துக்கழக பொது மேலாளருக்குக் குழு பரிந்துரை செய்கிறது.

வரிசை எண்.	மனு எண்	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
14	1180	திரு. எ. ராஜேந்திரன், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, ஒன்றிய செயலாளர், சுப்பிரமணியபுரம் (அ) அறந்தாங்கி வட்டம், புதுக்கோட்டை மாவட்டம்.	சுப்பிரமணியபுரம் கிராமத்தில் ஆதிதிராவிடர் மாணவர் விடுதி ஏற்படுத்தி தரக்கோருதல்.

துறையின் பதிலுரை.

(5)

அறந்தாங்கி வட்டம், சுப்பிரமணியபுரம் கிராமத்தில் அரசு ஆதிதிராவிடர் மாணவர் விடுதி கட்ட இவ்வலுவலக ந.க.க்யூ. 5/25434/2011, நாள்: 19–9–2011–இல் சென்னை ஆதிதிராவிடர் நலத்துறை ஆணையருக்கு பிரேரணை அனுப்பி வைக்கப்பட்டு கண்காணிக்கப்பட்டு வருகிறது.

[மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அலுவலர், புதுக்கோட்டை அவர்களின் கடித எண். க்யு5/25434/2011, நாள் 15–9–2011]

குழுவின் பரிந்துரை.

(6)

சுப்பிரமணியபுரம் கிராமத்தில் அடுத்த ஆண்டு முதல் ஆதி திராவிடர் மாணவர் விடுதி செயல்பட ஏதுவாக விடுதிக்கான இடம் தேர்வு செய்து, விடுதி கட்ட உரிய நடவடிக்கை எடுக்குமாறு புதுக்கோட்டை, மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலருக்குக் குழு பரிந்துரை செய்கிறது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
15	1189	திரு. ஆ. சக்திவேல், த/பெ. ஆண்டி, பொதுமக்கள் மற்றும் நேரு யுவகேந்திரா இளைஞர் மன்றம், பல்லவராயன் பத்தை, கறம்பக்குடி தாலுகா, புதுக்கோட்டை மாவட்டம்.	பல்லவராயன்பத்தை அரசு உயர்நிலைப் பள்ளிக்கு இரண்டு வகுப்பறை மட்டுமே உள்ளதால், மாணவர்களின் நலன் கருதி கூடுதல் கட்டிடம் கட்டக் கோருதல்.

துறையின் பதிலுரை.	குழுவின் பரிந்துரை.
(5)	(6)
அனைத்து அரசு உயர்நிலைப் பள்ளிகளுக்கும் வகுப்பறைகள் உள்ளிட்ட அடிப்படை வசதிகள் மற்றும் ஆய்வக வசதிகளை இனிவருங்காலத்தில் அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்டம் (RMSA) மூலம் செயல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளுமாறு தமிழ்நாடு பள்ளிக்கல்வி இயக்குநரின் ந.க.எண். 62254/ N2/இ2/2011, நாள்: 4–8–2011–ன்படி தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன்படி 2011–2012–ம் ஆண்டில் பல்லவராயன்பத்தை அரசு உயர்நிலைப்பள்ளிக்கு ரூ.44 லட்சம் மதிப்பீட்டில் 8 வகுப்பறைகள் கொண்ட கூடுதல் கட்டிடம் கட்ட RMSA திட்ட மாநில இயக்குநருக்கு 27–8–2011–ல் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. ஆணை எதிர்நோக்கப்பட்டு கண்காணிக்கப்பட்டு வருகிறது. [முதன்மைக் கல்வி அலுவலர் (பொ), புதுக்கோட்டை அவர்களின் கடித எண். 7298/அ1/2010, நாள் 3–11–2011]	பல்லவராயன்பத்தை அரசு உயர்நிலைப் பள்ளிக்குக் கூடுதல் கட்டடம் கட்ட தேவைப்படும் நிதி கோரி அனுப்பப்பட்ட பிரேரணை மீது உரிய நடவடிக்கை எடுக்க அரசுக்கு குழு பரிந்துரை செய்வதுடன், இது குறித்து தொடர்ந்து கண்காணிக்கவும் புதுக்கோட்டை முதன்மை கல்வி அலுவலருக்கு குழு பரிந்துரை செய்கிறது.

வரிசை எண்.	மனு எண்	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
16	1192	திரு. கே.ஆர்.என்.போஸ், முன்னாள் ஒன்றிய பெருந்தலைவர், குன்னாண்டார்கோவில் ஒன்றியம்.	அன்னவாசல் –குளத்தூர் சாலை கி.மீ. 0/0–13/8 வரை 4 கி.மீ. சாலையை செப்பனிட்டு, சரிசெய்து தரம் உயர்த்தக் கோருதல்.

துறையின் பதிலுரை.	குழுவின் பரிந்துரை.
(5)	(6)
மேற்படி மேம்பாட்டுப் பணி கி.மீ. 5/0–6/0 மற்றும் 8/0–11/0 வரை 4 கி.மீ. சாலையை மேம்படுத்துவதற்கு அரசு ஆணை எண் 119/எச்–1, நாள் 24–10–2011–இல் ரூபாய் 49.00 இலட்சத்திற்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இப்பணிக்காக ஒப்பந்தம் 28–11–2011 இல் அழைக்கப்பட்டுள்ளது. ஒப்பந்தம் முடிந்ததும் பணி துவக்கப்படும். இச்சாலையை, மாவட்ட முக்கிய சாலையாக தரம் உயர்த்த தேவையான போக்குவரத்து செறிவு இல்லை. அதாவது இந்தச் சாலையில், வாகனங்களின் போக்குவரத்து மிகவும் குறைவாக உள்ளது. இந்நிலையில் தரம் உயர்த்த வேண்டிய அவசியம் எழவில்லை. [கோட்டப்பொறியாளர் (நெ) புதுக்கோட்டை அவர்களின் கடித எண். 1438/ 2011, நாள் 30–8–2011.]	மாவட்ட முக்கிய சாலையாக தரம் உயர்த்த தேவையான நடவடிக்கைகளை எடுக்க குழு பரிந்துரை செய்கிறது.

வரிசை எண்.	மனு எண்	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
17	1193	திரு. கே.ஆர்.என். டோஸ், முன்னாள் ஒன்றிய பெருந்தலைவர், தலைமை பொதுக்குழு உறுப்பினர், குன்றாண்டார் கோவில் ஊராட்சி ஒன்றியம்.	ஒடுக்கூர் முதல் பெருங்குடிப்பட்டி செல்லும் சாலை கி.மீ. 0/0ல் உயர்மட்டப் பாலம் அமைக்க கோருதல்.

துறையின் பதிலுரை

(5)

ஒடுக்கூர் முதல் பெருங்குடிப்பட்டி செல்லும் சாலை கி.மீ. 0/0ல் உயர்மட்டப் பாலத்தினை அக்கினி ஆற்றின் குறுக்கே 90 மீட்டர் நீளத்தில் அமைக்க உத்தேச மதிப்பீடு ரூ. 225.00 இலட்சம் ஆகும். இதற்கான கருத்துரு தயார் செய்யப்பட்டு திட்ட இயக்குநரின் கடித எண் 3136/2011–ல் நாள்: 17–11–2011ன்படி சென்னை ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் ஆணையர் அவர்களுக்கு தொகுக்கப்பட்ட ஒப்படைக்கப்பட்ட வகுவாய் மான்யத் திட்டத்தில் (Scheme component of pooled Assigned revenue 2011–12) எடுத்துச் செய்ய அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

[கூடுதல் இயக்குநர்/திட்ட இயக்குநர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, புதுக்கோட்டை அவர்களின் கடித எண் ஜி1/2385/2011, நாள்: 9–9–2011.]

குழுவின் பரிந்துரை

(6)

ஒடுக்கூர் முதல் பெருங்குடிப்பட்டி செல்லும் சாலையில் உயர்மட்டப் பாலம் அமைக்க உரிய நடவடிக்கை எடுக்குமாறு புதுக்கோட்டை திட்ட இயக்குநர் அவர்களுக்கு குழு பரிந்துரை செய்கிறது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
18	1195	திருமதி. ஆர். சிவகாமி ராஜமாணிக்கம், ஊராட்சி மன்றத் தலைவர், வெள்ளாளவிடுதி, கறம்பக்குடி ஊராட்சி ஒன்றியம், புதுக்கோட்டை மாவட்டம்.	புதுக்கோட்டை மாவட்டம், கறம்பக்குடி தாலுகா, வெள்ளாளவிடுதி ஊராட்சியில் ஒரு கால்நடை கிளை நிலையம் அல்லது ஒரு கால்நடை பார்வை மையம் அமைக்க கோருதல்

மாட்டினம்	–	2290	அலகு
எருமை	–	99	அலகு
வெள்ளாடு	–	129	அலகு
செம்மறியாடு	–	46	அலகு
மொத்தம்	–	2564	அலகுகள்.

புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி வட்டம், வெள்ளாளவிடுதி, கிராமத்தில் 18–வது கால்நடை கணக்கெடுப்பின்படி ஒரு கிளைநிலையம் அமைத்திட அலகுகளின் எண்ணிக்கை போதுமானதாக இல்லை என்பதாலும் வெள்ளாளவிடுதி கிராமத்தின் அருகில் மழையூர் கால்நடை மருந்தகம் 10 கி.மீ. தொலைவிலும், மற்றும் வேலாடிப்பட்டி கால்நடை மருந்தகம் 8 கி.மீ. தொலைவிலும் உள்ளது. அரசு விதிமுறைகளின்படி ஒரு கால்நடை மருந்தகத்திற்கும் பிரிதொரு கால்நடை மருந்தகத்திற்கும் 8 கி.மீ. இருக்க வேண்டும். எனவே வெள்ளாளவிடுதி கிராமத்தில் புதியதாக ஒரு கிளைநிலையம் தோற்றுவிக்க சாத்திக்கூறுகள் ஏதுமில்லை. அவ்வப்போது கால்நடைப் பாதுகாப்புத் திட்ட முகாம்கள் மட்டுமே நடத்திட சாத்திக்கூறுகள் உள்ளது. மேலும் கால்நடை மருந்தகம் அமைப்பதற்கு 10,000 அலகுகளும், கால்நடை கிளை நிலையம் அமைப்பதற்கு 5000 அலகுகளும் இருக்க வேண்டும்.

[உதவி இயக்குநர் (கூ.பொ.) கால்நடை பராமரிப்பு, புதுக்கோட்டை அவர்களின் கடித எண் 77/ந/ 2011, நாள்: 14–10–2011.]

புதிய கால்நடை கிளை நிலையம் அடுத்த ஆண்டில் அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், அதுவரை வாரம் ஒருமுறை நடமாடும் கால்நடை மருந்தகம் மேற்படி கிராமத்திற்கு சென்று சேவை செய்ய வேண்டும் என்றும் குழு பரிந்துரை செய்கிறது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
19	1196	திரு. ஆர். செந்தில்குமார், த/பெ. இராசாமி, கரும்புக்குறிச்சி, பூவலூர் அஞ்சல், ஆவுடையார்கோவில் தாலுகா.	ஆவுடையார்கோவில் ஊராட்சி ஒன்றியம், பூவலூர் ஊராட்சியில் குடிநீர் வசதி கோருதல்.

துறையின் பதிலுரை

(5)

ஆவுடையார்கோவில் ஊராட்சி ஒன்றியம்–பூவலூர் ஊராட்சியில் ஆழ்குழாய் கிணறு அமைக்க மதிப்பீடு ரூ. 6,00,000/– ஆகும். சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டத்தின்கீழ் ஒதுக்கீடு வரப்பெற்றவுடன் ஆழ்குழாய் கிணறு அமைத்துத் தரப்படும்.

[ஆணையர், ஊராட்சி ஒன்றியம், ஆவுடையார்கோவில் அவர்களின் கடித எண் 2967, நாள்: 7–9–2011.]

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் கருக்கம்.
(1)	(2)	(3)	(4)
20	1198	திருமதி. ஆர். சிவகாமி ராஜமாணிக்கம், ஊராட்சி மன்றத் தலைவர், வெள்ளாளவிடுதி ஊராட்சி, கறம்பக்குடி தாலுகா, புதுக்கோட்டை மாவட்டம்.	வெள்ளாளவிடுதி ஊராட்சியில் குறைந்த மின்னழுத்தம் போக்கி விவசாயிகள் பொதுமக்கள் குறைதீர்க்க 5 எண்ணம் மின்மாற்றி அமைக்க கோருதல்.

துறையின் பதிலுரை

(5)

புதுக்கோட்டை மாவட்டம் கறம்பக்குடி தாலுகா, வெள்ளாளவிடுதி ஊராட்சியில் கீழ்க்கண்ட கிராமங்கள் உள்ளன.

1. வெள்ளாளவிடுதி, 2. ஆதிதிராவிடர்காலனி, 3. மேலப்பட்டி, 4. உடைச்சான்கொல்லை, 5. வளவன்தெரு, 6. குளவாய்ப்பட்டி, 7. குயவர்தெரு.

மேற்கண்ட 7 கிராமங்களில் உள்ள வீடு மற்றும் தெருவிளக்குகளுக்கும் மற்றும் விவசாய மின்இணைப்புகளுக்கும் இவ்வூராட்சியில் உள்ள 8 எண்ணம் மின்மாற்றிகள், அதிரான்விடுதியில் உள்ள ஒரு மின்மாற்றி மற்றும் ஆர்.ஜி.ஜி.வி.ஒய் திட்டத்தின்முலம் ஒன்று ஆக மொத்தம் 10 மின்மாற்றிகள் 963 கி.வாட் திறனில் இயங்கி வருகிறது. மின்னழுத்த குறைபாடு ஏதும் இல்லை. எனவே, மேலும் புதிய மின்மாற்றி அமைக்க வேண்டிய அவசியம் தற்போது எழவில்லை. மேலும் ஆர்.ஜி.ஜி.வி.ஒய் திட்டம் வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ள வீடுகளுக்கு மின் விஸ்தரிப்பு செய்வதற்கு என்றே ஏற்படுத்தப்பட்ட திட்டம். அதன் அடிப்படையில்தான் ஆர்.ஜி.ஜி.வி.ஒய் மின்மாற்றி நிறுவப்பட்டுள்ளது.

[மேற்பார்வை பொறியாளர், புதுக்கோட்டை மின் பகிர்மான வட்டம், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம், புதுக்கோட்டை அவர்களின் கடித எண் மே.பொ.பு.மிபவ/உசெபொ/வ/முநிவ2/கோ.சபேம/அ.எண் 492/2011 நாள்: 7–9–2011.]

குழுவின் பரிந்துரை

(6)

பூவலூர் ஊராட்சியில் குடிநீர் வசதி செய்வதற்கு தேவையான நிதியினை, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ஒதுக்கித்தர சட்டமன்ற உறுப்பினர் அறிவித்துள்ளதற்கிணங்க உரிய நிதியைப் பெற்று இப்பணியை நிறைவேற்றிட குழு பரிந்துரை செய்கிறது.

குழுவின் பரிந்துரை

(6)

வெள்ளாள விடுதி குளவாய்ப்பட்டி, குமணர் தெரு ஆகிய கிராமங்களில் மின்மாற்றிகளின் திறனை உயர்த்தி ஒரு மாதத்திற்குள் அமைக்க குழு பரிந்துரை செய்கிறது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
21	1201	திரு. க. சிவஞானம், பந்துவக்கோட்டை, மருதன்கோன்விடுதி, கறம்பக்குடி, புதுக்கோட்டை.	பந்துவகோட்டை கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க கோருதல்.

துறையின் பதிலுரை

(5)

புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க வேண்டுமென்றால், 30,000 மக்கள் தொகையும், ஆரம்ப சுகாதார நிலையம் தோற்றுவிக்கப்படும் கிராமத்தின் சுற்றுவட்டாரத்தில் 8 கி.மீ. தொலைவிற்கு மேல்தான் மற்ற ஆரம்ப சுகாதார நிலையங்கள், அரசு மருத்துவனைகள் இருக்க வேண்டும். ஆனால் பந்துவக்கோட்டை கிராமத்தின் மக்கள் தொகை 948 ஆகும். மிக அருகாமையிலேயே (3 கி.மீ. தொலைவில்) ரெகுநாதபுரம் ஆரம்ப சுகாதார நிலையம் உள்ளது. எனவே பந்துவக்கோட்டை கிராமத்தின் மக்கள் தொகை மற்றும் தூரத்தின் அடிப்படையில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க இயலாது.

மேலும் பந்துவக்கோட்டை கிராமத்தைச் சுற்றி கீழ்க்கண்ட ஆரம்ப சுகாதார நிலையங்கள் இயங்கி வருகின்றன.

1) ரெகுநாதபுரம்–3 கி.மீ.

2) பாப்பாபட்டி–5 கி.மீ.

[துணை இயக்குநர், சுகாதாரப்பணிகள் மற்றும் குடும்ப நலம், புதுக்கோட்டை அவர்களின் கடித எண் 2542/அ1/2011, நாள்: 7–9–2011.]

குழுவின் பரிந்துரை

(6)

துணை சுகாதார நிலையம் அமைக்க உரிய நடவடிக்கை எடுக்க குழு பரிந்துரை செய்கிறது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
22	1208	திரு. இரா. தயாளன், குளமங்கலம் வடக்கு (அஞ்சல்), கீரமங்கலம் (வழி) புதுக்கோட்டை மாவட்டம்.	1. அறந்தாங்கி முதல் ஆலங்குடி வரை இயக்கப்படும் தடம் எண் 22 பேருந்தினை மதியம் ஒரு முறை கூடுதலாக இயக்கக் கோருதல். 2. பேராவூரணியிலிருந்து கீரமங்கலம், குளமங்கலம் வடக்கு வழியாக கொத்தமங்கலம் வரை ஒரு நாளைக்கு 2 முறை பேருந்து வசதி செய்து தரக் கோருதல்.

துறையின் பதிலுரை

(5)

1. தடம் எண் 22 பேருந்து காலை, மாலை நேரங்களில் பள்ளி மாணவர்கள் வசதிக்காக இவ்வழித்தடத்தில் இயக்கப்படுகிறது. காலை, மாலை நேரத்தில் பயணிகள் பயன்பாடு அதிகமாக தேவைப்படும் நேரத்திலேயே பயணிகளின் பயன்பாடு (OR-Occupancy Ratio) 48.6 சதவீதமே உள்ளது. எனவே, இவ்வழித்தடத்தில் தற்பொழுது கூடுதல் நடைகள் இயக்க இயலாதநிலை உள்ளது. மேலும் இப்பேருந்து பல்முனைத்திட்டத்தின்கீழ் 4 வழித்தடத்தில் இயக்கப்படுகிறது. இப்பேருந்தினை மதியம் ஒரு முறை மாற்றி இயக்கினால் அந்த நேரத்தில் மற்ற ஊர்களுக்கு செல்லும் நடைகளில் குறைவு ஏற்பட்டு அந்த கிராம மக்கள் பாதிப்பு அடைய நேரிடும். இருப்பினும் புதிய வழித்தடங்கள் அரசால் துவக்கப்படும்போது இவ்வழித்தடத்தில் கூடுதல் நடைகள் இயக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

2. தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கும்பகோணம்) லிமிடெட், கும்பகோணம் மண்டலம் மூலமாக தெரிவிக்கப்பட்ட அறிக்கையின்படி கோரிக்கை தடம் புதிய வழித்தடமாகும். தட நீளம் 30.0 கி.மீட்டர் இத்தடத்தில் பேராவூரணியிலிருந்து கீரமங்கலம் வழியாக கொத்தமங்கலம் வரை தடம் எண் எ7 மூலம் 14 நடைகளும், அறந்தாங்கி கிளை தடம் எண் 22 மூலம் 4 நடைகளும் அறந்தாங்கி, பனங்குளம், குலமங்கலம் வடக்கு, கொத்தமங்கலம் என பகுதி பகுதியாக பேருந்து வசதி உள்ளது. மேலும் மனு எண் 1163–ன்படி டிசம்பர் கடைசி வாரத்தில் நிறைவேற்றப்படும் கோரிக்கையான புதுக்கோட்டை–பேராவூரணி வரை உள்ள பேருந்து செயல்பாடு துவங்கும் போது மேற்கண்ட வழித்தட கோரிக்கையும் பூர்த்தி செய்யப்படும்.

[பொது மேலாளர், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், (கும்பகோணம்) லிமிடெட், புதுக்கோட்டை மண்டலம் அவர்களின் கடித எண் தஅபோக/கும்ப/பும/வ2/1321, நாள்: 3–9–2011.]

குழுவின் பரிந்துரை

(6)

தடம் எண் 22 பேருந்தினை மேலும் ஒரு கூடுதல் நடை இயக்குவதோடு பேருந்துகள் ஏதும் நிறுத்தப்பட்டிருந்தால் அவற்றை மீண்டும் இயக்குவதற்கு உறுதியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
23	1224	திரு. ந. பாலசுப்பிரமணியன், கறம்பக்குடி தாலுகா, புதுக்கோட்டை மாவட்டம்.	மழையூர் அரசு மேல்நிலைப்பள்ளிக்கு தண்ணீர் வசதி, கழிப்பிட வசதி மற்றும் குழந்தைகள் சாலையில் இடதுபுறம் செல்ல வசதி கோருதல்.

துறையின் பதிலுரை	குழுவின் பரிந்துரை
(5)	(6)
புதுக்கோட்டை மாவட்டம், மழையூர் அரசு மேல்நிலைப் பள்ளிக்கு ஏற்கனவே தண்ணீர் வசதி மற்றும் கழிவறை வசதி போன்ற அடிப்படை வசதிகள் செய்து தரப்பட்டுள்ளது. சாலை பாதுகாப்புபடை பள்ளிகளில் ஆரம்பிக்கப்பட்டு உள்ளது. மாணவர்களுக்கு சாலை விழிப்புணர்வு ஏற்படுத்தும் பொருட்டு போக்குவரத்து துறையினரால் வழங்கப்பட்ட சிடி. மற்றும் சாலை விதிகள் அடங்கிய வழிகாட்டு நூல்கள் வழங்கப்பட்டு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. சாலை விதிகள் பற்றி இறைவணக்கக் கூட்டத்தில் அறிவுறுத்தப்பட்டுள்ளது. [முதன்மைக் கல்வி அலுவலர் (பொ.) புதுக்கோட்டை அவர்களின் கடித எண் 5078/அ1/2011, நாள் 14–11–2011.]	மழையூர் அரசு மேல்நிலைப்பள்ளிக்கு மாவட்ட ஆட்சித் தலைவரின் ஆலோசனையுடன், எஸ்.எஸ்.ஏ. நிதியுதவியில் கழிப்பிட வசதி செய்து தர நடவடிக்கை எடுக்க முதன்மை கல்வி அலுவலர் அவர்களுக்கு குழு பரிந்துரை செய்கிறது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
24	1228	திருமதி. எம். தேவி, ஊராட்சி மன்றத் தலைவர், ஆமாஞ்சி, அறந்தாங்கி ஒன்றியம், புதுக்கோட்டை மாவட்டம்.	அறந்தாங்சி ஊராட்சி ஒன்றியம், ஆமாஞ்சி ஊராட்சி, இடையன்காடு முஸ்லிம் குடியிருப்பில் இடிந்த குடிநீர் தொட்டிக்கு பதிலாக மாற்று குடிநீர் தொட்டி கட்டித்தரக் கோருதல்.

துறையின் பதிலுரை

(5)

ஆமாஞ்சி ஊராட்சி, இடையன்காடு குடியிருப்பின் மக்கள் தொகை 2006–ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 469 ஆக இருந்தது. தற்போதைய மக்கள் தொகை 750 ஆக உள்ளது. இக்குடியிருப்பில் முஸ்லிம் குடியிருப்பு ஒரு பகுதியாகவும், ஆதிதிராவிடர் குடியிருப்பு மற்றும் இதரர் ஒரு பகுதியாகவும் உள்ளது. முஸ்லிம் குடியிருப்பு பகுதியில் 1989–ம் வருடம் பெருங்காடு கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் கட்டப்பட்டு பின் ஊராட்சியின் பராமரிப்பில் இருந்த 10,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி பழுதடைந்ததன் காரணமாக இடிக்கப்பட்டு விட்டது. தற்போது இதற்கென அமைக்கப்பட்டிருந்த ஆழ்குழாய் கிணற்றில் இருந்து பகிர்மானக் குழாய் மூலம் நேரடியாக குடிநீர் வழங்கப்பட்டு வருகின்றது.

இக்குடியிருப்பின் மற்றொரு பகுதியான ஆதி திராவிடர் குடியிருப்பு மற்றும் இதரர் பகுதியில் 2001–ம் ஆண்டு ஒரு 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டியுடன் கூடிய தனிமின்விசைத் திட்டம் கட்டிமுடிக்கப்பட்டு ஊராட்சியின் பராமரிப்பில் இயங்கி வருகிறது. முஸ்லிம் குடியிருப்பு பகுதி மேட்டுப்பகுதியாக உள்ளதால் 30,000 லிட்டர் மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டியிலிருந்து சரிவர குடிநீர் விநியோகம் செய்ய இயலவில்லை. எனவே, முஸ்லிம் குடியிருப்புப் பகுதியில் இடிக்கப்பட்ட 10,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி கட்டி குடிநீர் வழங்க வாரியத்திற்கு பரிந்துரை செய்து சென்னை, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய மேலாண்மை இயக்குநர் அவர்களுக்கு, இவ்வலுவலக கடிதம் எண் 269/இவ.அ.கோ.ப.மே.நி./2011 நாள்: 26–9–2011–இன்படி கருத்துரு அனுப்பப்பட்டு கண்காணிக்கப்பட்டு வருகிறது.

[1. வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ) ஊராட்சி ஒன்றியம், அறந்தாங்கி அவர்கள்.

2. நிர்வாகப் பொறியாளர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், கிழக்கு பகுதி கோட்டம், புதுக்கோட்டை அவர்களின் கடித எண் அ7/0029/2011, நாள்: 5–9–2011.]

குழுவின் பரிந்துரை

(6)

முஸ்லிம் குடியிருப்பில் இடிக்கப்பட்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியினை மீண்டும் கட்டிமுடிக்கும் பணியை விரைவில் செய்து முடிக்கும்படி குழு பரிந்துரை செய்கிறது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
25	1230	திரு. பி. காசிநாதன், விளானூர்.	புதுக்கோட்டை மாவட்டம் ஆவுடையார்கோவில் ஒன்றியம், விளானூர் முதல் சிவனகிரி கிராமம் வரை இணைப்புச் சாலை கோருதல்.

துறையின் பதிலுரை

(5)

ஆவுடையார்கோவில் ஊராட்சி ஒன்றியம்–விளானூர் முதல் சிவனகிரி இடையே உள்ள தூரம் 3.30 கி.மீ. ஆகும். விளானூரில் சுமார் 500 பேரும், சிவனகிரியில் சுமார் 100 பேரும் வசிக்கின்றனர். விளானூரிலிருந்து 600 மீ. தொலைவில் கொளுவனார் ஆறு சுமார் 80 மீ நீளம் உள்ளது. இதில் பாலம் கட்டப்பட வேண்டும். அதன் பிறகு பட்டா விளைநிலம் 1 கி.மீ. தூரம் உள்ளது. சாலை அமைக்க அகலம் போதுமானதாக இல்லை. ஆனால், இப்பகுதி மக்கள் சென்றுவர சாதாரண கப்பி ரோடு உள்ளது. எனவே, இணைப்புச் சாலை அமைக்க அவசியமில்லை.

[ஆணையர் ஊராட்சி ஒன்றியம், ஆவுடையார்கோவில் அவர்களின் கடித எண் 2967/ நாள்: 5–9–2011.]

குழுவின் பரிந்துரை

(6)

ஆவுடையார்கோவில் ஒன்றியம், விளானூர் முதல் சிவனகிரி கிராமம் வரை இணைப்புச் சாலை அமைக்க உரிய நடவடிக்கை எடுக்க திட்ட இயக்குநர் மற்றும் ஆவுடையார்கோவில் ஊராட்சி ஒன்றிய ஆணையருக்கு குழு பரிந்துரை செய்கிறது.



இணைப்பு–II

குழுவினால் படித்துப் பதிவு செய்யப்பட்ட மனுக்கள் குறித்த விவரங்கள்


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு–II

குழுவினால் படித்துப் பதிவு செய்யப்பட்ட மனுக்கள் குறித்த விவரங்கள்

வரிசை எண்.	மனு எண்	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் கருக்கம்
(1)	(2)	(3)	(4)
1	1143	திரு. கோ. இராமலிங்கம், பெற்றோர் ஆசிரியர் கழக துணைத்தலைவர், அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளி, சுப்ரமணியபுரம், அறந்தாங்கி ஒன்றியம், புதுக்கோட்டை மாவட்டம்.	சுப்ரமணியபுரம் அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளியில் மாணவியருக்கு கல்வி பயில போதுமான இடவசதி இன்மையால் கூடுதலாக வகுப்பறை கட்டிடம் கட்டக் கோருதல்.

துறையின் பதிலுரை

(5)

புதுக்கோட்டை மாவட்டம் சுப்ரமணியபுரம் அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளி 2010–2011–ல் மேல்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்தப்பட்டது. இப்பள்ளிக்கு 2011–12ம் ஆண்டு நபார்டு திட்டம் PHASE XI மூலம் 6 வகுப்பறைகள் ஒரு மேல்நிலைப்பிரிவு அறிவியல் ஆய்வகம் மற்றும் 1 யூனிட் கழிவறை ஆகியன ரூ. 61.34 லட்சம் மதிப்பீட்டில் நபார்டு வங்கி மூலம் கடன் பெற்று கட்டிடங்கள் கட்ட அரசின் அனுமதி கோரி தமிழ்நாடு பள்ளிக்கல்வி இயக்குநரின் ந.க. எண் 17208/N2–Phase XI–273 Schools நாள்: 25–8–2011–ன்படி பிரேரணை பள்ளிக்கல்வித்துறை அரசுச் செயலருக்கு அனுப்பப்பட்டுள்ளது. ஆணை எதிர்நோக்கப்பட்டு கண்காணிக்கப்பட்டு வருகிறது.

[முதன்மைக் கல்வி அலுவலர் (பொ.) புதுக்கோட்டை அவர்களின் கடித எண் 7298/அ1/2010, நாள்: 26–7–2011.]

குழுவின் குறிப்புரை

(6)

துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் கருக்கம்
(1)	(2)	(3)	(4)
2	1144	திரு. கோ. இராமலிங்கம், பெற்றோர் ஆசிரியர் கழகத் துணைத் தலைவர், அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளி, கப்பிரமணியபுரம் அஞ்சல், அறந்தாங்கி ஒன்றியம், புதுக்கோட்டை மாவட்டம்.	கப்ரமணியபுரம் அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளியில் 6,7,8 வகுப்பு மாணவியருக்கு SSA திட்டத்தின்கீழ் கழிப்பறை வசதியுடன்கூடிய 3 வகுப்பறைக் கட்டிடம் கட்டித்தர கோருதல்.

துறையின் பதிலுரை	குழுவின் குறிப்புரை
(5)	(6)
1. இப்பள்ளியில் 6,7,8 வகுப்புகளில் 260 மாணவியரும், 9,10,11,12 வகுப்புகளில் 792 மாணவியரும், மொத்தமாக 1052 பேர் பயின்று வருகின்றனர். 2. இந்நேர்வில் 6,7 மற்றும் 8 வகுப்புகளுக்கு SSA திட்டத்தின்மூலம் ஏற்கனவே 4 வகுப்பறைகளும், 3 கழிப்பறைகளும் கட்டப்பட்டுள்ளன. 3. எனினும் மனுதாரரின் கோரிக்கையின் அடிப்படையில் கூடுதல் கட்டிடம் தேவை என்பதால் 2011–2012–ஆம் ஆண்டில் 6 வகுப்பறைகள், ஒரு மேல்நிலைப்பிரிவு ஆய்வகம் மற்றும் 1 யூனிட் கழிவறை ஆகியன ரூ. 61.34 லட்சம் மதிப்பீட்டில் நபார்டு வங்கி மூலம் கடன் பெற்று கட்டிடங்கள் கட்ட அரசின் அனுமதி கோரி தமிழ்நாடு பள்ளிக்கல்வி இயக்குநரின் ந.க. எண் 17208/N2/Phase XI–273 Schools நாள்: 25–8–2011–ன்படி பிரேரணை பள்ளிக் கல்வித்துறை அரசு செயலாளருக்கு அனுப்பப்பட்டுள்ளது. ஆணை எதிர் நோக்கப்பட்டு கண்காணிக்கப்பட்டு வருகிறது. [கூடுதல் முதன்மை கல்வி அலுவலர் (பொ.) அனைவருக்கும் கல்வி இயக்கம் அவர்களின் கடித எண் 786/கட்டடம்/அகஇ/2011, நாள்: 17–11–2011.]	துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
3	1145	திரு. அ. செல்லையா, கே. தெற்கு வீதி, சுப்ரமணியபுரம், அறந்தாங்கி கோட்டம், புதுக்கோட்டை மாவட்டம்.	சுப்ரமணியபுரம் அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளிக்கு ஆர்.எம்.எஸ்.ஏ. திட்டத்தின்கீழ் வகுப்பறை மற்றும் ஆய்வுக்கூடம் கட்டித் தர கோருதல்.

துறையின் பதிலுரை	குழுவின் குறிப்புரை
(5)	(6)
புதுக்கோட்டை மாவட்டம் சுப்ரமணியபுரம் அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளி 2010–2011–ல் மேல்நிலைப்பள்ளியாக தரம் உயர்த்தப்பட்டது. இப்பள்ளிக்கு 2011–12–ம் ஆண்டில் நபார்டு திட்டம் PHASE XI மூலம் 6 வகுப்பறைகள் ஒரு மேல்நிலைப்பிரிவு அறிவியல் ஆய்வகம் மற்றும் 1 யூனிட் கழிவறை ஆகியன ரூ. 61.34 லட்சம் மதிப்பீட்டில் நபார்டு வங்கி மூலம் கடன் பெற்று கட்டிடங்கள் கட்ட அரசின் அனுமதி கோரி தமிழ்நாடு பள்ளிக்கல்வி இயக்குநரின் ந.க. எண் 17208/N2/Phase XI–273 Schools நாள்: 25–8–2011–ன்படி பிரேரணை பள்ளிக் கல்வித்துறை அரசு செயலாளருக்கு அனுப்பப்பட்டுள்ளது. ஆணை எதிர் நோக்கப்பட்டு கண்காணிக்கப்பட்டு வருகிறது. [முதன்மைக் கல்வி அலுவலர் (பொ.) புதுக்கோட்டை அவர்களின் கடித எண் 7298/அ1/2010, நாள்: 26–7–2011.]	துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
4	1147	திரு. இராமலிங்கம், தபெ, அடைக்கலம், அரையப்பட்டி அஞ்சல், சிலட்டூர் வழி, திருவரங்குளம் ஒன்றியம், புதுக்கோட்டை மாவட்டம்.	அரையப்பட்டி, ஆரம்ப சுகாதார நிலையத்தில் பிரசவ வார்டு கட்டிடம் கட்டித்தரக் கோருதல்.

துறையின் பதிலுரை	குழுவின் குறிப்புரை
(5)	(6)
அரையப்பட்டி ஆரம்ப சுகாதார நிலையம் 24 மணிநேர பிரசவ மையமாக செயல்பட்டு வருகிறது. மாதமொன்றுக்கு சராசரியாக 6 பிரசவங்கள் மட்டுமே நடைபெற்று வருகிறது. மேலும் இந்நிலையத்தில் 6 படுக்கைகள் கொண்ட பிரசவ கட்டிட வசதியும் உள்ளது.	துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.
ஒரு தாலுகாவிற்கு ஒரு அரசு மருத்துவமனை என்ற அரசு கொள்கையின்படி, ஏற்கனவே ஆலங்குடி, அரசு மருத்துவமனையான செயல்பட்டு வருகிறது. மேலும் அரையப்பட்டி ஆரம்ப சுகாதார நிலையத்திலிருந்து 10 கி.மீ. அருகில் ஆலங்குடி அரசு மருத்துவமனை செயல்பட்டு வருகிறது. மேலும் அரையப்பட்டி ஆரம்ப சுகாதார நிலையத்தில் போதுமான கட்டிட வசதி, பொதுமக்கள் பயனடைவதற்கு தேவையான மருத்துவ வசதியும் உள்ளது. மனுதாரரின் கோரிக்கை ஏற்கனவே செயல்படுத்தப்பட்டு வருகிறது. எனவே, அரையப்பட்டி மருத்துவமனையை அரசு மருத்துவமனையாக தரம் உயர்த்தும் அவசியம் எழுவில்லை.	
[துணை இயக்குநர், சுகாதாரப்பணிகள் மற்றும் குடும்ப நலம், புதுக்கோட்டை அவர்களின் கடித எண் 2542/அ1/2011, நாள்: 7-9-2011.]	

28

வரிசை எண்.	மனு எண்	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் கருக்கம்
(1)	(2)	(3)	(4)
5	1150	டாக்டர். அமைதி, சமூக ஆர்வலர், கிள்ளுக்கோட்டை-622 502, குளத்தூர் தாலுக்கா, புதுக்கோட்டை மாவட்டம்.	கிள்ளுக்கோட்டை அரசு மேல்நிலைப்பள்ளியில் பயிலும் 100 மாணவர்களின் நலன் கருதி பள்ளியில் பிளஸ் 2 புதிய தேர்வு மையம் கோருதல்.

துறையின் பதிலுரை

(5)

புதுக்கோட்டை மாவட்டம் கிள்ளுக்கோட்டை அரசு மேல்நிலைப்பள்ளியில் 2011–2012–ம் ஆண்டில் மேல்நிலைப் பிரிவில் 69 மாணவர்கள் கல்வி பயின்று வருகின்றனர். புதிய தேர்வு மையம் அமைக்க குறைந்த பட்சம் 100 மாணவர்கள் தேர்வு எழுத வேண்டும். (சென்னை–6, அரசு தேர்வு இயக்குநரின் ந.க.எண் 050190/மே.நி–6/2011 நாள்: 12–09–2011) ஆனால் இவ்வாண்டு 69 மாணவர்கள் மட்டுமே பிளஸ் 2 தேர்வு எழுதவுள்ளனர். மேலும் இணைப்புப் பள்ளிகள் ஏதும் இப்பள்ளியில் தேர்வு எழுத விருப்பம் தெரிவிக்கவில்லை. எனவே, இந்த ஆண்டு பிளஸ் 2 புதிய தேர்வு மையம் அமைக்க பரிந்துரை செய்ய இயலாது.

[முதன்மைக் கல்வி அலுவலர் (பொ.) புதுக்கோட்டை அவர்களின் கடித எண் 5078/அ1/2011, நாள்: 1–11–2011.]

குழுவின் குறிப்புரை

(6)

துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

29

வரிசை எண்.	மனு எண்	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் கருக்கம்
(1)	(2)	(3)	(4)
6	1151	திரு. எ. சண்முகம் (நேரு), குளமங்கலம் வடக்கு (அஞ்சல்), கீரமங்கலம் (வழி), ஆலங்குடி வட்டம், புதுக்கோட்டை (மாவட்டம்)–614 624.	புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி வட்டம், குளமங்கலம் வடக்கு, தெற்கு, சேந்தாங்குடி, கொத்தமங்கலம், பனங்குளம் கிராமங்களில் மின்சார பற்றாக்குறையை போக்க குளமங்கலம் வடக்கு கிராமத்தில் துணை மின் நிலையம் அமைக்க கோருதல்.

துறையின் பதிலுரை

(5)

குளமங்கலம் வடக்கு கிராமத்திலிருந்து சுமார் 5 கி.மீ. தொலைவில் கீரமங்கலம் 33/11 கி.வோ. துணை மின் நிலையம் 2X8MVA திறன் கொண்ட திறன் மின்மாற்றி இயங்கி வருகிறது. இத்துணை மின் நிலையத்தை 110/11 கி.வோ. ஆக தரம் உயர்த்தி 2X10MVA திறன் கொண்ட மின்மாற்றிகள் அமைக்க 23-8-2011 அன்று அனுமதி பெறப்பட்டுள்ளது. 12வது ஐந்தாண்டு திட்டத்தில் 2012-13 நிதியாண்டில் பணி செய்து முடிக்க 29-10-2011 அன்று திட்ட முன்வடிவு ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. இத்துடன் உயர் மின்அழுத்த 110000 V மின்பாதை வழியாக மின்சாரம் பெறப்படுவதால் குளமங்கலம் வடக்கு, தெற்கு சேந்தாங்குடி, கொத்தமங்கலம் மற்றும் பனங்குளம் பகுதிகளில் தரமான மின்சாரம், மின் பற்றாக்குறை இன்றி வழங்க இயலும். எனவே, மேலும் ஒரு துணை மின் நிலையம் குளமங்கலம் வடக்கில் அமைக்க தேவை தற்போது எழவில்லை.

[மேற்பார்வை பொறியாளர், புதுக்கோட்டை மின் பகிர்மான வட்டம், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம், புதுக்கோட்டை அவர்களின் கடித எண் மே.பொ.பு.மிவப/உசெபொ/வ/முநிவ2/கோ.சமேம/அ.எண் 622/11, நாள்: 9-11-2011.]

குழுவின் குறிப்புரை

(6)

துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
7	1153	திரு. கோ. செந்தில்குமார், த/பெ. கோவிந்தராஜ், மருங்கூரணி, சுந்தம்பட்டி ஊராட்சி.	சுந்தம்பட்டி ஊராட்சி மருங்கூரணியில் மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி அமைத்து தரக் கோருதல்.

துறையின் பதிலுரை	குழுவின் குறிப்புரை
(5)	(6)
சுந்தம்பட்டி ஊராட்சியைச் சேர்ந்த மருங்கூரணி கிராமத்தில் 500 மக்கள் தொகை உள்ளது. தற்போது இந்தக் கிராமத்தில் 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி நல்ல முறையில் இயங்கி வருகிறது. நாள் ஒன்றுக்கு நபர் ஒன்றுக்கு வழங்கப்பட வேண்டிய 40 லிட்டர் தண்ணீர் தடையின்றி வழங்கப்படுகிறது. (LPCD) எனவே கூடுதலான மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி இப்போதைக்கு கட்ட வேண்டிய அவசியம் இல்லை. [ஆணையர் ஊராட்சி ஒன்றியம், கந்தர்வகோட்டை அவர்களின் கடித எண் அ7/907/2011, நாள்: 17–11–2011.]	துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
8	1154	திரு. பி. வாசுதேவன், முன்னாள் ஒன்றியக்குழு உறுப்பினர், திருநாளூர், அறந்தாங்கி ஒன்றியம்.	திருநாளூர் வடக்கு–கட்டையன் குடியிருப்பில்–இடிக்கப்பட்ட 10,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்தேக்கத் தொட்டிக்கு பதிலாக, புதிய மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி அமைக்க கோருதல்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
சத்யமேவ ஜெயதே
TRUTH ALONE TRIUMPHS

துறையின் பதிலுரை

(5)

திருநாளூர் வடக்கு குடியிருப்பின் ஒரு பகுதியான கட்டையன் குடியிருப்பின் தற்போதைய மக்கள் தொகை 350 ஆக உள்ளது. இங்கு 1988–89–ம் ஆண்டு மறமடக்கி கூட்டுக் குடிநீர் திட்டத்தின்கீழ் ஒரு 10,000 லிட்டர் மேல்நிலை நீர்த் தேக்கத்தொட்டி கட்டப்பட்டு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வந்தது.

மறமடக்கி கூட்டுக் குடிநீர் திட்டத்திலிருந்து சுவலுல்தாரா திட்டத்தின்கீழ் தனியாக ஒரு ஆழ்குழாய் கிணறு அமைத்து தனி மின்விசைத் திட்டமாக ஊராட்சியின் பராமரிப்பில் செயல்பட்டு வந்தது. இந்நிலையில் மேல்நிலை நீர்த் தேக்கத்தொட்டி மிகவும் பழுதடைந்து கீழே இதற்கென அமைக்கப்பட்டுள்ள ஆழ்குழாய் கிணற்றிலிருந்து பகிர்மானக்குழாய் மற்றும் நீரேற்று குழாய் மூலம் நேரடியாக குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

ஆனால் மும்முனை மின்சாரம் போதுமான அளவு கிடைக்காததாலும் பிரதான குழாயில் ஆங்காங்கே குழாய்களில் பிரித்து குடிநீர் விநியோகிக்கப்படுவதாலும், கடைக்கோடி பகுதிகளுக்கு குடிநீர் சரிவர கிடைப்பதில்லை. எனவே, திருநாளூர் வடக்கு–கட்டையன் குடியிருப்பு வடக்குப் பகுதியில் இடிக்கப்பட்ட 10,000 லிட்டர் மேல்நிலை நீர்த் தேக்கத்தொட்டிக்கு பதிலாக புதிதாக ஒரு 10,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டியை 3.5 லட்சம் மதிப்பீட்டில் கட்டுவதற்கான கருத்துரு இவ்வலுவலக கடித எண் 269/2011–2012/இவ.அ2/கோ/ப.மே.நி. நாள்: 26–09–2011–இன்படி சென்னை குடிநீர் வடிகால் வாரிய தலைமை அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது.

[நிர்வாகப் பொறியாளர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், கிராம குடிநீர் திட்டக் கோட்டம், புதுக்கோட்டை அவர்களின் கடித எண் 269/இவ.அ2/கோ.ப.மே.நி/2011–2012, நாள்: 26–9–2011.]

குழுவின் குறிப்புரை

(6)

துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் கருக்கம்
(1)	(2)	(3)	(4)
9	1160	திரு. ஆர். சிவசாமி கண்டியர், பி.ஜே.பி. மாவட்ட செயலாளர், சத்தியமங்கலம் மற்றும் ஊர் பொதுமக்கள்.	சத்தியமங்கலம் மயானப்பாதை குறுக்குசாலை ஆதிதிராவிடர் பொதுமக்களுக்கான சத்தியமங்கலம் முதல் பொன்னடாப்பட்டி மிகவும் பழுதடைந்துள்ளதால் செப்பனிட கோருதல்.

துறையின் பதிலுரை

(5)

சத்தியமங்கலம் கிராமத்தில் சுமார் 120 ஆதிதிராவிடர் குடும்பங்கள் வசிக்கின்றனர், இவற்றுக்கான மயானப்பாதை சத்தியமங்கலத்தில் இருந்து சுமார் 2 கி.மீ. தூரத்தில் புல எண் 187/1 பரப்பு 27.72.5 ஹெக்டேர் அரசு புறம்போக்கு சிறுகக்குளம் என்று வகைப்படுத்தப்பட்ட இடத்தில் பயன்படுத்தப்படுகிறது. சுமார் 27 ஆண்டுகளுக்கு முன்பு ஊராட்சி மூலம் மண்கிராவல் அடிக்கப்பட்ட ரோடு தற்போது இருபக்கமும் மண் அரிப்பு ஏற்பட்டு பழுதடைந்துள்ளது.

இம்மயானத்தை அனைத்து வகுப்பினரும் பயன்படுத்தி வருகிறார்கள். இம்மயானம் பொதுவான மயானமாக பயன்படுத்தப்படுவதால் ஊராட்சி, உதவி இயக்குநர், மூலம் நடவடிக்கை மேற்கொள்ளலாம்.

அசல் மனு புதுக்கோட்டை பஞ்சாயத்து ஊராட்சி உதவி இயக்குநருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

ஊராட்சியில் நிதியின்மையால், இப்பணியை மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை மூலம் மேற்கொள்ளலாம் என, ஊராட்சி உதவி இயக்குநர் தெரிவித்துள்ளார். "வரும் நிதியாண்டில் மேற்படி சாலை முன்னுரிமை அடிப்படையில் நிதிநிலைக்கேற்றவாறு ஊராட்சி ஒன்றியப் பொதுநிதியிலிருந்து எடுத்து செய்திட நடவடிக்கை எடுக்கப்படும்" என மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் தெரிவித்துள்ளார்.

[ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர், புதுக்கோட்டை அவர்களின் க.எண். க்யு3/25435/2011 நாள்: 9–11–2011.]

குழுவின் குறிப்புரை

(6)

துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
10	1164	திரு. க. அருமைநாயகம், எண். 23, அரசன்நகர், ராஜாப்பட்டி அஞ்சல், புதுக்கோட்டை.	அரசன் நகரில் பேருந்து நிறுத்தம் என்ற போர்டை மீண்டும் வைத்து, பேருந்து நின்று செல்ல வேண்டுதல்.

துறையின் பதிலுரை	குழுவின் குறிப்புரை
(5)	(6)
புதுக்கோட்டை–அண்டக்குளம் செல்லும் சாலையில் தர்கா பேருந்து நிறுத்தத்திற்கு முன்பாக 0.5 கி. மீட்டர் தூரத்தில் அரசன் நகர் உள்ளது. இந்த இடத்தில் 4 வீடுகள் மட்டுமே உள்ளது. இந்த இடத்தில் பக்கத்து கிராமத்தில் உள்ளவர்கள் வருவதற்கான சாலைகள் ஏதும் இல்லை. அங்கு இருந்ததாக குறிப்பிடும் பேருந்து நிறுத்த போர்டை போக்குவரத்து துறையைச் சார்ந்தவர்கள் யாரும் அகற்றவில்லை. அரசன்நகரில் வேண்டுகோள் நிறுத்தமாக கருதி நகர் பேருந்துகள் நின்று சென்று வருகிறது. [மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக்கழகம் (கும்பகோணம்) லிமிடெட், புதுக்கோட்டை மண்டலம் அவர்களின் கடித எண் தஅபோக/கும்ப/பும/வ2/1320 நாள்: 3–9–2011.]	துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
11	1165	திரு. சிவ. சிவக்குமார், மாங்களாம்பட்டி வம்பன் காலனி அஞ்சல், ஆலங்குடி தாலுகா.	புதுக்கோட்டை மாவட்டம், திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியம் வம்பன் நால் ரோடு சந்திப்பில் பேருந்து நிழற்குடை அமைத்து தர கோருதல்.

துறையின் பதிலுரை	குழுவின் குறிப்புரை
(5)	(6)
வம்பன் நால் ரோடு சாலையில் பொது மக்களின் அத்தியாவசிய தேவை அடிப்படையில் வரும் 2011–2012–ஆம் ஆண்டு சட்டமன்ற தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ. 75,000/– மதிப்பீட்டில் நிழற்குடை அமைத்து தர உரிய பரிந்துரை கடிதம் வழங்க கோரி ஆலங்குடி சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்கு இவ்வலுவலக ந.க.அ.2/1385/2010 நாள்: 31–10–2011–இல் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. இதற்கு உரிய பரிந்துரை கடிதம் கிடைத்த உடன் வம்பன் நால்ரோடு பகுதியில் நிழற்குடை அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும். [ஆணையர், ஊராட்சி ஒன்றியம், திருவரங்குளம், அவர்களின் கடித எண். அ2/13852010 நாள்: 16–11–2011.]	துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
12	1169	திரு. எம். நடனம், தலைவர், 2005–2006 புதுக்கோட்டை கிரவுன் சிட்டி ரோட்டரி கிளப்.	புதுக்கோட்டை மாவட்டம், அரிமளம் சாலையில் குண்டாற்று பாலம் வரை புதிதாக தூர் வாரி கரை போடப்பட்டுள்ளது. இந்த பாலத்தின் தொடர்ச்சியாக கிழக்கில் தூர்வாரி வல்லநாட்டு கண்மாய் வரை கரை போட்டு நீர்பரப்பு அதிகமாக்கவும், நீர் வீணாவதை தடுக்கவும் ஏற்பாடு செய்யக் கோருதல்.

துறையின் பதிலுரை	குழுவின் குறிப்புரை
(5)	(6)
புதுக்கோட்டை மாவட்டம், கவிநாடு மேற்கு கிராமம், கவிநாடு பெரிய கண்மாயின் இடதுபுற உபரிநீர் போக்கியிலிருந்து வெளியேறும் நீர் குண்டாறாக (Gundar River) உருவாகி திருமயம் வட்டம், கடையக்குடி கிராமம், ஹோல்ஸ்வொர்த் அணைக்கட்டின் மேல்புறத்தில் வெள்ளாறுடன் இணைகின்றது.	துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.
மனுதாரரின் கோரிக்கை நியாயமானது. இதனை நிறைவேற்ற புதுக்கோட்டையிலிருந்து அரிமளம் செல்லும் சாலையிலுள்ள குண்டாற்று மேம்பாலத்திலிருந்து வெள்ளாற்றுடன் இணையும் தூரம் சுமார் 3000 மீட்டர் வரை இருபுறமும் வெள்ளத்தடுப்பு கரைகள் அமைக்கப்பட வேண்டும்.	
தற்பொழுது விரிவான திட்ட மதிப்பீடு தயாரிக்கும் நிலையில் இருந்து வருகிறது. இது தொடர்பாக குண்டாற்றில் மட்ட அளவுகள் எடுக்க வேண்டி இருப்பதாலும், தற்பொழுது மழை பெய்து வருவதாலும், பருவ மழை முடிந்து ஒரு மாத காலத்தில் 31-01-2012-க்குள் விரிவான திட்ட மதிப்பீட்டினை தயார் செய்து கண்காணிப்பு பொறியாளர், நீர்வள ஆதாரத்துறை, நடுக்காவிரி வடிநில வட்டம், திருச்சி அவர்களுக்கு அனுப்பப்பட்டு நிதி ஆதாரமும் கேட்கப்பட்டு, கண்காணிக்கப்பட்டு வருகிறது.	
[செயற்பொறியாளர், பொதுப்பணித்துறை, நீர்வள ஆதாரத்துறை, தெற்கு வெள்ளாறு வடிநில கோட்டம், புதுக்கோட்டை அவர்களின் கடித எண். வ1/கோ. 157/2011/சமபேமகு./146ஏம் நாள்: 2-9-2011.]	

வரிசை எண்.	மனு எண்	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
13	1170	திரு. எம். நடனம், தலைவர், ரோட்டரி கிளப் ஆப் புதுக்கோட்டை, கிரௌன் சிட்டி, புதுக்கோட்டை.	புதுக்கோட்டை மாவட்டம், கடையக்குடி மற்றும் உப்புப்பட்டி சூலைப்பட்டி கிராம மக்கள் பயன்படுத்தும் மயானத்திற்கு செல்லும் வழியில் உள்ள குன்றாற்றில் பாலம் கட்டித்தரக் கோருதல்.

துறையின் பதிலுரை	குழுவின் குறிப்புரை
(5)	(6)
திருமலைராயசமுத்திரம் ஊராட்சிக்கு உட்பட்ட உப்புப்பட்டி சூலைப்பட்டி கிராமத்திற்கு அருகில் உள்ள பொதுப்பணித் துறைக்கு சொந்தமான குண்டாறு வழியாக மயானத்திற்கு செல்ல பாலம் அமைத்துத் தர மனுதாரர் கோரியுள்ளார். மேற்படி இடத்தில் பொதுப்பணித்துறை நீர் ஆதாரத்துறை மூலம் பாலம் அமைக்க இயலாது என தெரிவிக்கப்பட்டதை தொடர்ந்து மேற்படி இடத்தில் பாலம் அமைக்க செயற்பொறியாளர் பொதுப்பணித்துறை நீர் ஆதாரத்துறை அனுமதிபெறப்பட்டு ஊராட்சி ஒன்றிய பொது நிதியிலிருந்து 9.10 லட்சம் மதிப்பீட்டில் குழாய்பாலம் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. [ஆணையர், ஊராட்சி ஒன்றியம், புதுக்கோட்டை அவர்களின் கடித எண். அ2/2860/2011 நாள்: 16–11–2011.]	மனுதாரரின் கோரிக்கை மீது தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வரும் நிலையில், துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
14	1175	திரு. வ. மலையாண்டி, முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவர், ஆலவயல் ஊராட்சி, பொன்னமராவதி ஒன்றியம், திருமயம் தாலுகா.	பொன்னமராவதி தாலுகா, ஆலவயல் ஊராட்சி, ஆலவயலில் கால்நடை மருத்துவமனை தரம் உயர்த்தியபிறகும் மருத்துவர் நியமிக்கவில்லை. மேலும் 10 கி.மீ. சுற்றளவில் கால்நடை மருத்துவமனை ஏதும் இல்லை.

துறையின் பதிலுரை	குழுவின் குறிப்புரை
(5)	(6)
ஆலவயல் கால்நடை கிளை நிலையமாக செயல்பட்டு வருகிறது. இன்னும் தரம் உயர்த்தப்படவில்லை. ஆலவயல் கிராமத்தில் திரு. சி. பழனிச்சாமி கால்நடை ஆய்வாளர் பணிபுரிந்து வருகிறார். ஏற்கனவே கால்நடை ஆய்வாளர் பற்றாக்குறை காரணமாக ஒலியமங்கலம் மற்றும் நகரப்பட்டி கிளை நிலையங்களில் கூடுதல் பொறுப்பாக பணிபுரிந்து வருவதால் ஆலவயல் கிராமத்திற்கு பிரதிவாரம் ஞாயிறு, திங்கள், வியாழன் ஆகிய நாட்களில் பணிபுரிந்து வருகிறார். மேலும் 8 கி.மீ. தொலைவில் பொன்னமராவதி கால்நடை மருத்துவமனை இயங்கி வருகிறது. அதுமட்டுமல்லாமல் 6 கி.மீ. தொலைவில் சடயம்பட்டி கால்நடை மருந்தகமும் செயல்பட்டு வருகிறது. [உதவி இயக்குநர், கால்நடை பராமரிப்பு, அறந்தாங்கி அவர்களின் கடித எண். 77/இ/2011 நாள்: 14–10–2011.]	துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
15	1176	திரு. ஆர். மணிக்காந்தி, த/பெ. ராமசாமி, பாரதிநகர், அரசர்குளம் கீழ்பாதி, புதுக்கோட்டை மாவட்டம்.	அரசர்குளம் கீழ்பாதி, இந்திராகாந்தி சிலையிலிருந்து பாரதிநகர், மங்களநாடு, பொக்கன்நாடு, மணக்காடு வழியாக பேராவூரணிக்கு செல்ல பேருந்து வசதி செய்து தரக் கோருதல்.

துறையின் பதிலுரை

(5)

1. அரசர்குளம் கீழ்பாதியிலிருந்து பாரதி நகர் 0.5 கி.மீ. தொலைவில் உள்ளது. எனவே பேருந்து வசதி பெற்ற கிராமமாக உள்ளது.

2. பாரதி நகர் முதல் மங்கள நாடு வரை, 3.0 கி.மீ. சாலை குறுகலாகவும், ஆற்றங்கரையாகவும் உள்ளதால், பேருந்து இயக்க சாலை தகுதியற்று உள்ளது. இந்த குறுகலான தரைவழிச்சாலை ஆற்றின் நடுவே செல்வதால், இதனை அகலப்படுத்த வசதியற்று உள்ளது. இருந்த போதிலும் பாரதி நகர் மக்கள் சுப்பிரமணியபுரம் வழியாக மங்களநாடு செல்ல பேருந்து வசதி உள்ளது. அங்கிருந்து பொக்கன்காடு செல்லவும் பேருந்து வசதி உள்ளது.

3. பொக்கன்காடு முதல் பேராவூரணி வரையான சுமார் 5 கி.மீ. தூர சாலைப்பகுதியின் இடையில் அம்புலி ஆறு செல்கிறது. இதன் குறுக்கே பாலம் எதுவும் இல்லை. பொக்கன் காட்டிலிருந்து ரெட்டவயல் வழியாக பேராவூரணி செல்ல போதிய பேருந்து வசதி உள்ளது.

[பொது மேலாளர், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக்கழகம், (கும்பகோணம்) லிமிடெட், புதுக்கோட்டை மண்டலம் அவர்களின் கடித எண். தஅபோக/கும்ப/பும/வ2/1318 நாள்: 3–9–2011.]

குழுவின் குறிப்புரை

(6)

துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
16	1179	திருமதி. தனலெட்சுமி செல்லையா, ஊராட்சி மன்றத் தலைவர், குடுமியான்மலை ஊராட்சி, அன்னவாசல் ஒன்றியம், வயலோகம் (வழி), புதுக்கோட்டை மாவட்டம்.	இலுப்பூர் தாலுகா, அன்னவாசல் ஒன்றியம், குடுமியான்மலை ஊராட்சி அண்ணாநகர் கிராமத்திற்கு புதிய தொடக்கப்பள்ளி தொடங்க கோருதல்.

துறையின் பதிலுரை

(5)

அன்னவாசல் உதவித் தொடக்கக் கல்வி அலுவலரால் இக்கிராமத்தை 2-9-2011-ல் நேரில் பார்வையிட்டு அறிக்கை பெறப்பட்டதன் அடிப்படையில் இக்கிராமத்தில் மக்கள் தொகை 179+156=335 ஆகும்.

5 முதல் 10 வயதுள்ள குழந்தைகள் = 5+5=10
11 முதல் 14 வயதுள்ள குழந்தைகள் = 5+5=10
மொத்தம் 20

பள்ளி செல்லும் மாணவ, மாணவியர்கள் போதிய அளவு இல்லை. மாணவ, மாணவியர் 11 பேர் ½ கி.மீ தொலைவில் உள்ள குடுமியான்மலை ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளிக்கு சென்று வருகின்றனர். 1 கி.மீ. தூரம் இருந்தால் மட்டுமே புதிய தொடக்கப் பள்ளி தொடங்கிட இயலும். எனவே இவ்வூருக்கு புதிய தொடக்கப்பள்ளி தொடங்கிட விதிகளில் இடமில்லை.

[மாவட்ட தொடக்க கல்வி அலுவலர், புதுக்கோட்டை, அவர்களின் கடித எண். 4194/அ5/2011 நாள்: 8-9-2011.]

குழுவின் குறிப்புரை

(6)

துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் கருக்கம்
(1)	(2)	(3)	(4)
17	1182	திரு. ப. முத்துக்குமரன், புதுக்கோட்டை.	மழையூர் புறக்காவல் நிலையத்தினை (Police out-post) காவல் நிலையமாக உயர்த்தக் கோருதல்.

துறையின் பதிலுரை

(5)

மழையூர் புறக்காவல் நிலையத்தை காவல் நிலையமாக உயர்த்துவது (Up-Graded) தொடர்பாக தமிழக அரசிடமிருந்து உரிய ஆணையினைப் பெற்றுத்தர கோரிய கருத்துரு புதுக்கோட்டை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களின் கடித எண் அ1/16222/275/2011 நாள்: 16-08-2011 (நகல் இணைக்கப்பட்டுள்ளது)-ல் தமிழ்நாடு மாநில காவல்துறை இயக்குநர் அவர்களுக்கு 17-08-2011 அன்று அனுப்பப்பட்டுள்ளது.

[காவல் கண்காணிப்பாளரின் நேர்முக உதவியாளர் (பொது) புதுக்கோட்டை அவர்களின் கடித எண். அ1/14222/275/11, நாள்: 16-8-2011.]

குழுவின் குறிப்புரை

(6)

துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் கருக்கம்
(1)	(2)	(3)	(4)
18	1183	திருமதி. கமலம் சம்பந்தம், முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவர், அண்ணா மாளிகை அன்னாசாலை, சுப்பிரமணியபுரம்–614 805.	அறந்தாங்கி தாலுகா கூகனூர் குடியிருப்பு மற்றும் கூகனூர் புதுக்குடியிருப்பு பகுதியில் வசித்து வரும் பொதுமக்களுக்கு கூகனூர் குடியிருப்பில் நனி அங்காடி அமைத்து தரக் கோருதல்.

துறையின் பதிலுரை	குழுவின் குறிப்புரை
(5)	(6)
அறந்தாங்கி தாலுகா சுப்பிரமணியபுரம் முழு நேர அங்காடி தற்போது 684 குடும்ப அட்டைகளுடன் பின்வரும் கிராமங்களை உள்ளடக்கி செயல்பட்டு வருகிறது.	துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

1. சுப்பிரமணியபுரம் – 364 குடும்ப அட்டைகள்
2. கூகனூர் குடியிருப்பு 0.75. கி.மீ. – 168 குடும்ப அட்டைகள்
3. கூகனூர் புதுகுடியிருப்பு 0.75 கி.மீ. – 152 குடும்ப அட்டைகள்

கூடுதல் 684

அரசாணை எண். 147, கூட்டுறவு உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை நாள் 24–8–2006–ன்படி தாய் கடையில் 500 குடும்ப அட்டைகளும், இடைப்பட்ட தூரம் 1–5 கி.மீட்டரும் இருக்க வேண்டிய நிலையில் கூகனூர் குடியிருப்பில் இருந்து தற்போது சுப்பிரமணியபுரம் அங்காடி செயல்படும் இடத்திற்கு 0.75 கி.மீ. தூரம் மட்டுமே உள்ளதாலும், தாய்க்கடையில் 364 குடும்ப அட்டைகளே எஞ்சியிருக்கும் என்பதாலும், மேற்கண்ட அரசாணையில் உள்ள நெறிமுறைகள் பொருந்தி வராததாலும் கூகனூர் குடியிருப்பு கிராமத்தில் புதிய பகுதி நேர அங்காடி அமைக்க வாய்ப்பு இல்லை.

[இணைப்பதிவாளர், கூட்டுறவு சங்கங்கள், புதுக்கோட்டை, அவர்களின், கடித எண். 1997/2011/பொ.வி.தி. 3 (1) நாள்: 05–09–11.]

வரிசை எண்.	மனு எண்	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
19	1185	திரு. சி. செல்வம், நரங்கிப்பட்டு, கறம்பக்குடி தாலுகா, புதுக்கோட்டை மாவட்டம்.	கறப்பக்குடி ஊராட்சி ஒன்றியம் கறம்பக்குடி வாணியத்தெரு தொடக்கத்திலிருந்து நரங்கிப்பட்டு கிராமத்திற்கு தார்சாலை அமைத்துதரக் கோருதல்.

துறையின் பதிலுரை	குழுவின் குறிப்புரை
(5)	(6)
கறம்பக்குடி ஊராட்சி ஒன்றியம் – கறம்பக்குடி தோப்புநாயம் சாலை, கறம்பக்குடி–திப்பன்விடுதி சாலை கி.மீ. 0/0–6/0 இதில் 0.6 கி.மீட்டர் கறம்பக்குடி தோ்வு நிலை பேரூராட்சி வாணியத்தெரு எல்லைக்குட்பட்ட பகுதியாகும் 0/6–3/0 2.4 கி.மீ. மற்றும் கறம்பக்குடி திப்பன்விடுதி சாலை நபார்டு சாலைகள் XVI-ன் கீழ் 30.19 லட்சம் செலவீட்டில் தார் சாலை அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. அதில் 0/0–2/2 (2200 மீட்டர்) போக மீதமுள்ள 3.2 கி.மீ. நீளத்தை ஓரடுக்கு மெட்டல் போட்டு தார் சாலையாக மாற்றிட ரூபாய் 45.00 லட்சம் தேவைப்படும். இதற்கான கருத்துரு தொகுப்பட்ட ஒப்படைக்கப்பட்ட வருவாய் மான்யம் (PAR) 2011–2012 கீழ் ஊரக வளர்ச்சி ஆணையருக்கு அனுப்பப்பட்டுள்ளது. [கூடுதல் இயக்குநர்/திட்ட இயக்குநர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை புதுக்கோட்டை அவர்களின் கடித எண். ஜி1/2385/2011, நாள்: 16–11–2011.]	படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
20	1186	திரு. ஏ. ராஜேந்திரன், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி ஒன்றிய செயலாளர், விஜயபுரம்.	மன்னக்குடி, நாகுடி ஊராட்சி கிராமங்களை இணைக்கின்ற கல்லணை கால்வாய் இடது கரையில் 3 கிலோ மீட்டர் தொலைவிற்கு தார் சாலை அமைத்து தரக் கோருதல்.

துறையின் பதிலுரை

(5)

மன்னக்குடி, நாகுடி ஊராட்சி கிரமங்களை இணைக்கின்ற கல்லணை கால்வாய் இடது கரையில் 3 கிலோ மீட்டர் தார் சாலை அமைத்திட நபார்டு திட்டத்தில் மதிப்பீடு தயார் செய்து நிர்வாக அனுமதிப்பெற ஊரக வளர்ச்சி முகமைக்கு அனுப்பப்பட்டு நடவடிக்கையில் இருந்து வருகிறது. இச்சாலையினை தார்ச்சாலையாக அமைக்க தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

[வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ.) ஊராட்சி ஒன்றியம் அறந்தாங்கி, அவர்களின் கடித எண். அ7/0029/2011/நாள்: 5–9–2011.]

குழுவின் குறிப்புரை

(6)

துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
21	1187	திருமதி. கலாராணி, 14வது வார்டு முன்னாள் ஒன்றியக்குழு உறுப்பினர்.	குடுமியான்மலை ஊராட்சி, அரியமுத்துப்பட்டி செல்லும் சாலையினை தார் சாலையாக மாற்றித்தரக் கோருதல்.

துறையின் பதிலுரை

(5)

அன்னவாசல் ஊராட்சி ஒன்றியம் – குடுமியான்மலை ஊராட்சி மரிங்கிப்பட்டி அரியமுத்துப்பட்டி சாலை மெட்டல் சாலை தார் சாலையாக மாற்றிட கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது. இந்த சாலை மெட்டல் சாலையாக 2010–11 ஆம் ஆண்டு ஒன்றிய பொது நிதியிலிருந்து ரூ. 5.00 லட்சம் மதிப்பீட்டில் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. தற்பொழுது 1500 மீட்டர் நீளமுள்ள மேற்படி சாலையில் இரண்டாம் அடுக்கு மெட்டல் மற்றும் தார் சாலையாக தரம் உயர்த்திட 2011–12ஆம் ஆண்டில் அடிப்படையில் ஊரக கட்டமைப்பு திட்டத்தில் ரூ.17.00 லட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

[கூடுதல் இயக்குநர்/திட்ட இயக்குநர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, புதுக்கோட்டை அவர்களின் ஜி1/2385/2011, நாள்: 10–11–2011.]

குழுவின் குறிப்புரை

(6)

தொடர் நடவடிக்கையில் உள்ளதால், துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் கருக்கம்.
(1)	(2)	(3)	(4)
22	1190	திரு. ஆர். ஆறுமுகம், தலைவர், வர்த்தக சங்கம், மணமேல்குடி.	மணமேல்குடி ஊராட்சி ஒன்றியம் மணமேல்குடி தாலுகாவில் உள்ள 28 ஊராட்சிகளில் உள்ள மக்கள் வந்து செல்வதற்கு ஏதுவாக கடற்கரை சாலையில் புதிய பஸ் நிலையம் அமைக்க கோருதல்.

துறையின் பதிலுரை	குழுவின் குறிப்புரை
(5)	(6)
மணமேல்குடி ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த மணமேல்குடி ஊராட்சிக்கு சொந்தமான இடங்கள் ஏதும் கடற்கரை சாலையை ஒட்டி இல்லாததால் மணமேல்குடியில் பஸ் நிலையம் அமைக்க வட்டாட்சியருக்கு அறிக்கை அனுப்பப்பட்டுள்ளது. மேலும் மணமேல்குடி வழியாக கிழக்கு கடற்கரை சாலையிலிருந்து சென்னை முதல் இராமேஸ்வரம், தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி ஆகிய முக்கிய வழித்தடங்களை இணைக்கும் வழித்தடமாக உள்ளதால் நாள் ஒன்றுக்கு 200-க்கு மேற்பட்ட பேருந்துகள் வந்து செல்வதால், பேருந்து நிலையம் அமைத்திட ரூ. 5 கோடிக்கு மேல் நிதி ஒதுக்கீடு தேவைப்படும் நிலையில் உள்ளது. தேவையான நிதி ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியத்தில் போதுமானதாக இல்லாததால், அரசு சிறப்பு நிதி ஒதுக்கீடு வழங்கிடும் நிலையில் ஊராட்சி ஒன்றியத்தின் மூலம் பணி மேற்கொள்ளப்படும். [ஆணையர், ஊராட்சி ஒன்றியம், மணமேல்குடி அவர்களின் கடித எண் அ2/1272/2011 நாள்: 14-11-2011.]	துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் கருக்கம்
(1)	(2)	(3)	(4)
23.	1191	திரு. சி. துரைசிங்கம், நாங்கியப்பட்டு, கறம்பக்குடி தாலுகா, புதுக்கோட்டை மாவட்டம்.	கறம்பக்குடி ஊராட்சி ஒன்றியம் நாங்கியப்பட்டு கிராமத்திற்கு தார்ச்சாலை அமைத்துத் தரக் கோருதல்.

துறையின் பதிலுரை

(5)

கறம்பக்குடி ஊராட்சி ஒன்றியம் கறம்பக்குடி தோட்டநாயகம் சாலை, கறம்பக்குடி – திப்பன்விடுதி சாலை கி.மீ. 0/0.6/0 இதில் 0.6 கி.மீட்டர் கறம்பக்குடி தேர்வு நிலை பேரூராட்சி வாணியத்தெரு எல்லைக்குட்பட்ட பகுதியாகும். 0/6.3/0.2.4 கி.மீ. மற்றும் கறம்பக்குடி, திப்பன்விடுதி சாலை நபார்டு சாலைகள் XVI–ன் கீழ் 30.19 லட்சம் செலவீட்டில் தார் சாலை அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. அதில் 0/0–2/2 (2200 மீட்டர்) போக மீதமுள்ள 3.2 கி.மீ. நீளத்தை ஓரடுக்கு மெட்டல் போட்டு தார் சாலையாக மாற்றிட ரூபாய் 45.00 லட்சம் தேவைப்படும். இதற்கான கருத்துரு தொகுக்கப்பட்ட ஒப்படைக்கப்பட்ட வருவாய் மான்யம் (PAR) 2011–2012 கீழ் ஊரக வளர்ச்சி ஆணையருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

[கூடுதல் இயக்குநர்/திட்ட இயக்குநர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை புதுக்கோட்டை அவர்களின் கடித எண் இ1/2385/2011, நாள்: 16–11–2011.]

குழுவின் குறிப்புரை

(6)

துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் கருக்கம்
(1)	(2)	(3)	(4)
24	1194	திரு. எம்.ஆர். சைவராஜ், முன்னாள் இளைஞரணி செயலாளர், மலையடிப்பட்டி, குளத்தூர் தாலுகா.	குளத்தூர் தாலுகா மலையடிப்பட்டி கிராம மக்கள் விளாங்குடி–கோட்டை உலகங்காத்தான்பட்டியில் பொருட்களை பெறுவதை மாற்றி மலையடிப்பட்டியில் பொருட்களைப் பெற, ஒரு பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்கக்கோருதல்.

துறையின் பதிலுரை	குழுவின் குறிப்புரை
(5)	(6)
குளத்தூர் தாலுகா CPO 36 உலகங்காத்தான்பட்டி முழுநேர அங்காடியில் தற்போது 365 குடும்ப அட்டைகளுடன் பின்வரும் கிராமங்களை உள்ளடக்கி செயல்பட்டு வருகிறது. 1. உலகங்காத்தான்பட்டி – 125 குடும்ப அட்டைகள் 2. மலையடிப்பட்டி – 110 குடும்ப அட்டைகள் 3. கலைக்குடிப்பட்டி மற்றும் குமரப்பட்டி – 130 குடும்ப அட்டைகள் கூடுதல் – 365 குடும்ப அட்டைகள் அரசாணை எண். 147 கூட்டுறவு உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை நாள் 24–8–2006ன்படி தாய் கடையில் 500 குடும்ப அட்டைகளும் பிரித்த பிறகு பகுதி நேர கடையில் 150 குடும்ப அட்டைகளும், தாய் அங்காடி செயல்படும் இடத்திலிருந்து 1.5 கி.மீ. தூரம் மேல் இருக்க வேண்டும். இந்நேர்வில் உலகங்காத்தான்பட்டி அங்காடியில் மொத்தம் 365 குடும்ப அட்டைகளே உள்ளதால் மேற்கண்ட அரசாணை நெறிமுறைகள் பொருந்தாத நிலையில் சிதம்பரஷிடுதி கிராமத்தில் புதிய பகுதி நேர அங்காடி அமைக்க வாய்ப்புகள் இல்லை. [இணைப்பதிவாளர், கூட்டுறவு சங்கங்கள், புதுக்கோட்டை அவர்களின் கடித எண். 1997/2011/பொ.வி.தி. 3(1) நாள்: 05–09–2011.]	துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் கருக்கம்
(1)	(2)	(3)	(4)
25	1205	திரு. கே. கணேசன், முன்னாள் ஊராட்சி ஒன்றிய குழு உறுப்பினர், பிலாவிடுதி.	கறம்பக்குடி ஊராட்சி ஒன்றியம் பிலாவிடுதி செட்டித்தெரு வேலாயிகோயில் தெருவில் தார்சாலை அமைத்துத் தரக் கோருதல்.

துறையின் பதிலுரை

(5)

கறம்பக்குடி ஊராட்சி ஒன்றியம், பிலாவிடுதி ஊராட்சியில் செட்டி தெரு வேலாயி அம்மன் கோயில் சாலை சுமார் 20 ஆண்டுகள் பழமையான தார்சாலையாக உள்ளது. இதன் நீளம் 400 மீ ஆகும். இச்சாலையினை முழுமையாக ஈரடுக்கு மெட்டல் பரத்தி தார்சாலை அமைத்திட சுமார் 6 லட்சம் தேவைப்படுகிறது. இச்சாலை முழுமைபெற்றால் மினி பஸ் போக்குவரத்து எளிதாகவும் மக்களுக்கு பெரிதும் பயன்படும் வகையிலும் அமையும். 2011–12 நிதியாண்டில் திட்டங்களின் அடிப்படையில் தாய்திட்டத்தில் நிதி பெற்று மேற்படி வேலை செய்து முடிக்கப்படும்.

[வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ.), கறம்பக்குடி அவர்களின் கடித எண் அ2/ 2504/2011, நாள்: 11–11–2011.]

குழுவின் குறிப்புரை

(6)

துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
26	1209	திரு. க. கருணாநிதி, செட்டித்தெரு, கந்தர்வகோட்டை, புதுக்கோட்டை.	(1) கந்தர்வகோட்டை ஊராட்சி ஒன்றியம், கோமாபுரத்தில் அருள்மிகு கமலாய முனிகோவில் வழியாக சமுத்திராப்பட்டி வரை இணைப்பு சாலை கோருதல். (2) கோமாபுரம் ஊராட்சி சமுத்திராப்பட்டி தார்சாலை மற்றும் சமுத்திராப்பட்டியிலிருந்து வல்லம் சாலைக்கு புதிய சாலை அமைக்க கோருதல்.

துறையின் பதிலுரை	குழுவின் குறிப்புரை
(5)	(6)
(1) கோமாபுரம் கிராமத்தில் இருந்து கமலாய முனி கோவில் வழியாக சமுத்திராப்பட்டி கிராமத்திற்கு செல்லும் சாலையின் நீளம் 3.800 கி.மீ. ஆகும். இதில் 0/0–0/800 கி.மீ. வரையுள்ள சாலை விவசாய நோக்கத்திற்காக மட்டும் பயன்படுத்தப்படுகிறது. இச்சாலையை ஊராட்சி ஒன்றியத்தின் வரும் முதல் கூட்டத்தில் தீர்மானம் இயற்றப்பட்டு இப்பணி மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். (2) சமுத்திராப்பட்டியிலிருந்து வல்லம்புதூர், சாலையில் இணையும் சமுத்திராப்பட்டி இணைப்பு சாலையானது சுமார் 2 கி.மீ. தூரம் தனியார் ஆக்கிரமிப்பில் உள்ளது. இச்சாலையில் உள்ள ஆக்கிரமிப்பினை முழுமையாக அகற்றப்பட்டது. இச்சாலையை செஞ்சரளை பரத்திட சாலை மேம்பாடு செய்திட ஊராட்சி ஒன்றியத்தின் வரும் முதல் கூட்டத்தில் தீர்மானம் இயற்றப்பட்டு இப்பணி மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். [ஆணையர், ஊராட்சி ஒன்றியம், கந்தர்வகோட்டை அவர்களின் கடித எண் அ2/1385/2010, நாள்: 16–11–2011.]	துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
27	1210	திரு. ஆர். ஆறுமுகம், தலைவர், வர்த்தகசங்கம், மணமேல்குடி.	மணமேல்குடி ஊராட்சி செங்குந்தபுரத்தில் கழிவுநீர் மற்றும் மழைநீர் செல்ல வாய்க்கால் அமைத்து தரக் கோருதல்.

துறையின் பதிலுரை	குழுவின் குறிப்புரை
(5)	(6)
மணமேல்குடி ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த மணமேல்குடி ஊராட்சிக்கு உட்பட்ட செங்குந்தபுரத்தில் புதிய கழிவு நீர் வாய்க்கால் அமைக்க, தாய் திட்டத்தின்கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. [ஆணையர், ஊராட்சி ஒன்றியம், மணமேல்குடி அவர்களின் கடித எண் அ2/1272/2011, நாள்: 14–11–2011.]	துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
28	1213	திரு. கே. கணேசன், பிலாவிடுதி அஞ்சல், கறம்பக்குடி ஒன்றியம், புதுக்கோட்டை மாவட்டம்.	கறம்பக்குடி–பிலாவிடுதி–செவ்வாய்பட்டி வழியாக ஓரத்தநாடு பட்டுக்கோட்டை பேருந்து இயக்க கோருதல்.

துறையின் பதிலுரை

(5)

குழுவின் குறிப்புரை

(6)

மனுதாரரின் கோரிக்கையின் பேரில் தடம் ஆய்வு செய்யப்பட்டது. பட்டுக்கோட்டையிலிருந்து கறம்பக்குடி செல்லும் தற்போதைய பேருந்தினை மனுதாரர் குறிப்பிட்டுள்ள ஊர்கள் வழியாக மாற்றி இயக்கம் செய்ய செவ்வாய்ப்பட்டிக்கும், கூத்தப்பட்டிக்கும் இடையே உள்ள இரண்டு சிறிய பாலங்கள் பேருந்து செல்ல வசதியற்று இடையூறாக உள்ளன. இதனை சரிசெய்து இந்த வழியாக பேருந்து வசதி செய்யப்படும்.

(மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், கும்பகோணம் மண்டலம் அவர்களின் கடித எண் தஅபோக/கும்ப/சிடி7/த125/2011, நாள்: 27–10–2011.]

துறையின் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
29	1218	திருமதி சத்யா பாலகப்பிரமணியன், முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவர், செங்கமேடு ஊராட்சி, கறம்பக்குடி ஊராட்சி ஒன்றியம்.	திருப்பக்கோவில் மணமடை வழி வெள்ளத்தான்கொல்லை இணைப்புச்சாலையை மெட்டல் மற்றும் தார்சாலையாக அமைத்துத் தரக் கோருதல்.

துறையின் பதிலுரை	குழுவின் குறிப்புரை
(5)	(6)
திருப்பக்கோவில் மணமடை வழி வெள்ளத்தான்கொல்லை இணைப்பு சாலை கி.மீ. 0/0–3/0 இதில் 1 கி.மீ. சாலை சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2010–11 ஆம் ஆண்டில் ரூ. 11.00 இலட்சம் மதிப்பீட்டில் எடுத்து செய்யப்பட்டது. மீதமுள்ள 2 கி.மீ. சாலை கிராவல் சாலையாக உள்ளது. இதனை இரண்டு அடுக்கு மெட்டல் பரப்பி தார்சாலை அமைக்க ரூ. 30.00 இட்சமாகும். இதற்கான கருத்துரு தொகுக்கப்பட்ட ஒப்படைக்கப்பட்ட வருவாய் மானியம் (PAR) 2011–2012 கீழ் ஊரக வளர்ச்சி ஆணையருக்கு அனுப்பப்பட்டுள்ளது.	துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.
(கூடுதல் இயக்குநர்/திட்ட- இயக்குநர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, புதுக்கோட்டை அவர்களின் கடித எண் ஜி/2385/2011, நாள்: 16–11–2011.)	

வரிசை எண்.	மனு எண்	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
30	1219	திருமதி சத்யா பாலசுப்பிரமணியன், முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவர், செங்கமேடு ஊராட்சி, கறம்பக்குடி தாலுகா, புதுக்கோட்டை மாவட்டம்.	இன்னான்விடுதி மற்றும் பத்துத்தாக்கு கிராமத்தில் குறைந்த மின்னழுத்தம் உள்ளதால் இக்கிராமங்களில் புதிய மின்மாற்றி அமைத்துத் தரக் கோருதல்.

துறையின் பதிலுரை	குழுவின் குறிப்புரை
(5)	(6)
இன்னான்விடுதி கிராமத்திற்கு செங்கமேடு மின்மாற்றி 1–ல் இருந்து மின்சார விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. தற்போது இன்னான்விடுதி முருகன்கோவில் அருகில் மின்மாற்றி அமைக்க அனுமதியாகியுள்ளது. பத்துத்தாக்கு கிராமத்திற்கு செங்கமேடு மின்மாற்றி 2–ல் இருந்து மின்சார விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. தற்போது குடிநீர் மற்றும் வீட்டு மின் இணைப்புகளுக்கு மட்டும் தனியாக ஒரு மின்மாற்றி அமைக்க அனுமதியாகி உள்ளது. நடவடிக்கை எடுக்கப்பட்டு மேற்படி இரண்டு 63 KVA/11KV திறன் கொண்ட மின்மாற்றிகளும் 31–12–2011க்குள் அமைத்து மின்னூட்டம் செய்யப்பட்டு குறைந்த மின்னழுத்தம் சரி செய்யப்படும்.	83 கேவி/ 11 கே.வி திறன் கொண்ட 2 மின்மாற்றிகள் 31–12–2011க்குள் அமைத்து குறைந்த மின் அழுத்தம் சரி செய்யப்படும் என தெரிவிக்கப்பட்டதால், துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.
[மேற்பார்வை பொறியாளர், புதுக்கோட்டை மின் பகிர்மான கழகம், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் புதுக்கோட்டை அவர்களின் கடித எண் மே.பொ.பு.மி.பவ/உ.செ.பொ/வ/முநிவ 2/கோ.சபேம/அ.எண் 623/11, நாள்: 9–11–2011.]	

வரிசை எண்.	மனு எண்	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
31	1220	திருமதி பி. சத்யா பாலகப்பிரமணியன், முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவர், செங்கமேடு ஊராட்சி, கறம்பக்குடி தாலுகா.	கறம்பக்குடி ஊராட்சி ஒன்றியம் இன்னான்விடுதி கண்ணுத்தோப்பு வழியாக செங்கமேடு இணைப்புசாலையை தார்சாலையாக மாற்ற கோருதல்.

துறையின் பதிலுரை	குழுவின் குறிப்புரை
(5)	(6)
கறம்பக்குடி ஊராட்சி ஒன்றியம் செங்கமேடு, ஊராட்சிக்கு உட்பட்ட இன்னான்விடுதி மற்றும் கண்ணுத்தோப்பு கிராமங்களில் சுமார் 300 குடும்பங்கள் உள்ளன. கண்ணுத்தோப்பு கிராமத்திற்கு இன்னான்விடுதி கிராமத்திற்கும் இடையே மண்சாலை உள்ளது. இதன் நீளம் 600 மீ ஆகும். இச்சாலையை ஈரடுக்கு மெட்டல் பரத்தி தார்சாலையாக மாற்றிட சுமார் 10 லட்சம் தேவைப்படுகிறது. 2011–12 நிதியாண்டில் திட்டங்களின் அடிப்படையில் தாய் திட்டத்தில் நிதிபெற்று மேற்படி வேலை செய்து முடிக்கப்படும். [வட்டார வளர்ச்சி அலுவலர், (வ.ஊ.), கறம்பக்குடி அவர்களின் கடித எண். அ2/ 2504/2011, நாள்: 11–11–2011.]	துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
32	1226	திரு. ஆர். சுரேஷ்குமார், நரங்கியம்பட்டி, கறம்பக்குடி தாலுகா, புதுக்கோட்டை மாவட்டம்.	கறம்பக்குடி ஊராட்சி ஒன்றியம் நரங்கியப்பட்டு கிராமத்திற்கு தார்ச்சாலை அமைத்துத் தர கோருதல்.

துறையின் பதிலுரை	குழுவின் குறிப்புரை
(5)	(6)
கறம்பக்குடி ஊராட்சி ஒன்றியம்–கறம்பக்குடி தோப்புநாயம் சாலை, கறம்பக்குடி–திப்பன்விடுதி சாலை கி.மீ. 0/0–6/0 இதில் 0.6 கி.மீட்டர் கறம்பக்குடி தோ்வு நிலை பேரூராட்சி வாணியத்தெரு எல்லைக்குட்பட்ட பகுதியாகும். 0/6.3/0 2.4 கி.மீ. மற்றும் கறம்பக்குடி திப்பன்விடுதி சாலை நபார்டு சாலைகள் XVI-ன் கீழ் 30.19 லட்சம் செலவீட்டில் தார் சாலை அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. அதில் 0/0–2/2 (2200 மீட்டர்) போக மீதமுள்ள 3.2 கி.மீ. நீளத்தை ஒரடுக்கு மெட்டல் போட்டு, தார் சாலையாக மாற்றிட ரூபாய் 45.00 லட்சம் தேவைப்படும். இதற்கான கருத்துரு தொகுக்கப்பட்ட ஒப்படைக்கப்பட்ட வருவாய் மான்யம் (PAR) 2011–2012 கீழ் ஊரக வளர்ச்சி ஆணையருக்கு அனுப்பப்பட்டுள்ளது. (கூடுதல் இயக்குநர்/திட்ட இயக்குநர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, புதுக்கோட்டை அவர்களின் கடித எண் ஜி1/2385/2011, நாள்: 16–11–2011.)	துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண்.	*மனு எண்*	*மனுதாரரின் பெயரும், முகவரியும்.*	*மனுவின் சுருக்கம்*
(1)	*(2)*	*(3)*	*(4)*
33	1229	திரு. வி. சிவசாமி, ஊராட்சி மன்றத் தலைவர், வாண்டாக்கோட்டை ஊராட்சி, திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியம், ஆலங்குடி வட்டம்.	வெள்ளாற்றின் குறுக்கே பாலம் அமைத்து தர கோருதல்.

துறையின் பதிலுரை	குழுவின் குறிப்புரை
(5)	(6)
புதுக்கோட்டை அறந்தாங்கி சாலையில் வாண்டாக்கோட்டையிலிருந்து பிரிந்து திருவிடையாப்பட்டி வழியாக மிரட்டுநிலைக்கு செல்லும் சாலையின் குறுக்கே வெள்ளாறு கடந்து செல்கிறது. மேலும் சாலையில் இருந்து வெள்ளாறுவரை மொத்தம் 3.6 கி.மீ. நீளம் உள்ளது. இச்சாலை கரும்பு அபிவிருத்தி திட்டத்தின்கீழ் மேம்பாடு செய்யப்பட்டுள்ளது. வெள்ளாற்றின் குறுக்கே சுமார் 200 மீட்டர் நீளத்திற்கு பாலம் அமைக்க 2010–2011ம் ஆண்டிற்கு ரூ. 286 இலட்சத்தில் உரிய மதிப்பீடு தயார் செய்து புதுக்கோட்டை மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, பெருந்தலைவர்/ மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு உரிய மதிப்பீடு தயார் செய்து 6–10–2010 அன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. எனவே உரிய அனுமதி வரப்பெற்றதும், பாலம் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். [ஆணையர், ஊராட்சி ஒன்றியம், திருவரங்குளம் அவர்களின் கடித எண் 2754/2011/அ, நாள்: 4–11–2011.]	துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
34	1232	திரு. எம். பாபு, த/பெ. அ. முத்துச்சாமி, கண்ணாரத்தெரு, இலுப்பூர்.	இலுப்பூர் தேர்வுநிலை பேரூராட்சி செட்டிக்குண்டு அருகில் நவீன மகளிர் சுகாதார வளாகம் அமைக்க கோருதல்.

துறையின் பதிலுரை	குழுவின் குறிப்புரை
(5)	(6)
புதுக்கோட்டை மாவட்டம் இலுப்பூர் தேர்வுநிலை பேரூராட்சிக்குட்பட்ட செட்டிக்குண்டு அருகில் கழிப்பிடம் அமைத்திட 14–12–2010ம் தேதி நடைபெற்ற மன்ற சாதாரணக் கூட்டத்தில் பொருள் வைக்கப்பட்டது. மேற்படி கூட்டத்தில் மதிப்பீடு தயார் செய்து அரசு நிதி பெற்று செய்ய தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. தீர்மான எண் 562, நாள் 14–12–2010) மேற்படி தீர்மானத்தை தொடர்ந்து தற்போது 2011–2012ம் ஆண்டு ஒருங்கிணைந்த நகர்ற வளர்ச்சி குழுமம் திட்டத்தின்கீழ் புதிய கழிப்பிடம் அமைத்திட ரூ. 5.00 லட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்து கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது. [செயல் அலுவலர், இலுப்பூர் தேர்வுநிலை பேரூராட்சி, புதுக்கோட்டை மாவட்டம் அவர்களின் கடித எண் அ/148/2011, நாள்: 8–11–2011.]	துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
35	1233	திரு. எஸ். பாலகிருஷ்ணன், ஒன்றிய குழு உறுப்பினர், முன்னாள் ஒன்றிய துணை பெருந்தலைவர், ஆவணத்தான்கோட்டை, அறந்தாங்கி.	தஞ்சாவூர்–சாயல்குடி சாலை கி.மீ. 89/0–90/0 கருவாட்டிவாரி தரைப்பாலத்தை உயர்மட்ட பாலமாக மாற்றித் தரக் கோருதல்.

துறையின் பதிலுரை	குழுவின் குறிப்புரை
(5)	(6)
தஞ்சாவூர்–சாயல்குடி சாலை கி.மீ. 89/2–ல் மூன்று தரைமட்ட பாலம் நல்ல நிலையில் உள்ளது. மேற்படி கருவாட்டிவாரி ஓடைப்பாலத்தை உயர்மட்ட பாலமாக கட்டுவதற்கு முன்னுரிமை கொடுக்கப்படும். [கோட்டப்பொறியாளர் (நெ) (கமீப) புதுக்கோட்டை அவர்களின் கடித எண் 1438, நாள்: 29–8–2011.]	துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

இணைப்பு–III

குழுவினால் நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்பட்ட மனுக்களின் விவரங்கள்

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMILNADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு–III

குழுவினால் நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்பட்ட மனுக்களின் குறித்த விவரங்கள்

வரிசை எண்.	மனு எண்	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
1	1146	திரு. எஸ்.பி. முத்துக்குமரன், புதுக்கோட்டை.	புதுக்கோட்டை மாவட்டத்திற்கு மருத்துவக் கல்லூரி அமைக்க கோருதல்.

துறையின் பதிலுரை	குழுவின் குறிப்புரை
(5)	(6)
புதுக்கோட்டை மாவட்டத்தில் புதிதாக ஒரு மருத்துவக் கல்லூரி அமைக்க அரசாணை எண் 57 சுகாதாரம் மற்றும் குடும்பநலம் நாள்: 12–2–2011 இன்படி நிர்வாக அனுமதி வரப்பெற்றுள்ளது. இந்நோ்வில், இடத்தேர்வு, கட்டிட மதிப்பீடு, நிதி ஒதுக்கீடு, கட்டுமான பணி போன்ற பணிகளை தொடங்கவும், தொடரவும், இவ்வலுவலக ந.க. 7160/ தி.வ./11, நாள்: 16–11–2011 இன்படி, சென்னை மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்குநருக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. (இணை இயக்குநர், மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள், புதுக்கோட்டை அவர்களின் கடித எண் 7160/திவ/11, நாள்: 16–11–2011.)	மருத்துவக் கல்லூரி அமைப்பதற்கு அனுமதித்து அரசாணை வெளியிடப்பட்டு, தொடர் நடவடிக்கையில் உள்ளதால் நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
2	1172	திரு. இரா. இராஜன், முன்னாள் ஊராட்சி ஒன்றிய தலைவர், சிவபார்வதம் இல்லம், கப்பிரமணியபுரம்–614 805, அறந்தாங்கி வட்டம், புதுக்கோட்டை மாவட்டம்.	அமரசிம்மேற்திரபுரம், பெத்தான்குளம் பாசன ஏரியின் ஒரு பகுதியினை வகைபாடு மாற்றம் (தரிசிலிருந்து குளம் புறம்போக்கு மாற்றம்) செய்வது குறித்து.

துறையின் பதிலுரை	குழுவின் குறிப்புரை
(5)	(6)
யூடி.ஆர் திட்டத்திற்கு பின்பு புல எண் 16/1,3,4 அரது தீர்வை ஏற்படாத தரிசு என மாற்றி உள்ளதை பழைய செட்டில்மெண்ட் படி குளம் புறம்போக்காக வகைமாற்றம் செய்யலாம் என நில அளவை உதவி இயக்குநர் மற்றும் அறந்தாங்கி வருவாய் கோட்டாட்சியர் ஆகியோரது பரிந்துரையின்படி மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களின் செயல்முறைகள் ந.க. டி3/32181/2011, நாள்: 16–11–2011 இன்படி, மனுதாரர் கோரிக்கையை ஏற்று ''குளம்'' என வகைபாடு மாற்றம் செய்ய உத்தரவிடப்பட்டுள்ளது. (உதவி இயக்குநர், நில அளவை பதிவேடுகள் துறை, புதுக்கோட்டை அவர்களின் கடித எண். ஆ1/7543/11, நாள்: 16–11–2011.)	நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
3	1181	திரு. ப. முருகேசன், ஊராட்சி மன்றத் தலைவர், கண்டியாநத்தம், பொன்னமராவதி ஒன்றியம், புதுக்கோட்டை மாவட்டம்.	கண்டியாநத்தம் கிராமத்தில் பொது விநியோக அங்காடிக் கட்டிடம் கட்டித் தரக் கோருதல்.

துறையின் பதிலுரை

(5)

பொன்னமராவதி ஊராட்சி ஒன்றியம், கண்டியாநத்தம் ஊராட்சியல் நியாய விலைக்கடை இரண்டு வருடமாக வாணம் தோண்டப்பட்ட நிலையில் கட்டப்படவில்லை எனவும் அதனை தற்போது கட்டித்தரவும் கோரி கண்டியாநத்தம் ஊராட்சி மன்றத்தலைவர் மனு செய்துள்ளார். கண்டியாநத்தம் கிராமத்தில் பொது விநியோக அங்காடி கட்டிடம் கட்ட டெண்டர் 11-12-2008ல் கோரப்பட்டது. இந்த அங்காடி 2008ல் பகுதி நேர அங்காடியாக இருந்ததால் கட்டப்படவில்லை.

பின்னர்2010-ல் கடை குறியீடு எண் EPO 20 மொத்த குடும்ப அட்டைகள் 306 உடன் முழுநேர அங்காடியாக செயல்பட்டு வருகிறது என புதுக்கோட்டை துணைப் பதிவாளர் ந.க. 782/2010, நாள்:20-9-2010ன் படி தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி அங்காடி தற்பொழுது ஊராட்சிக்கு சொந்தமான கட்டித்தில் இயங்கி வருகிறது.

எனவே கண்டியாநத்தம் கிராமத்தில் பொது விநியோக அங்காடி கட்டிடம் ஊராட்சி ஒன்றிய பொது நிதியில் இருந்து கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு ஒன்றியக்குழு தீர்மானம் எண் 760 நாள்: 17-8-2011-ன்படி ரூ. 3.15 லட்சம் மதிப்பீட்டில் எடுக்கப்பட்டு 14-9-2011 இல் டெண்டர் கோரப்பட்டு பணி தொடரப்பட்டுள்ளது.

[வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ.), பொன்னமராவதி அவர்களின் கடித எண் அ4/248/2011, நாள்: 9-9-2011.)

குழுவின் குறிப்புரை

(6)

பணிகள் முடியும் தருவாயில் உள்ளதால், நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்பட்டது.

59

வரிசை எண்.	மனு எண்	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் கருக்கம்
(1)	(2)	(3)	(4)
4	1197	திருமதி ஆர். சிவகாமி ராஜமாணிக்கம், ஊராட்சி மன்ற தலைவர், வெள்ளாளவிடுதி, கறம்பக்குடி ஊராட்சி ஒன்றியம்.	கறம்பக்குடி ஊராட்சி ஒன்றியம் வெள்ளாளவிடுதி ஊராட்சி மேலப்பட்டியில் ஒரு மினி பவர் பம்பு அமைக்க கோருதல்.

துறையின் பதிலுரை	குழுவின் குறிப்புரை
(5)	(6)
கறம்பக்குடி ஊராட்சி ஒன்றியம் வெள்ளாளவிடுதி ஊராட்சியில் மேலப்பட்டி கிராமத்தில் சுமார் 40 குடும்பங்கள் உள்ளன. இக்கிராமத்திற்கு அருகில் உள்ள வெள்ளாளவிடுதி கிராமத்தில் உள்ள 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல் நிலை நீர் தேக்க தொட்டியிலிருந்து வெள்ளாளவிடுதி மற்றும் மேலப்பட்டி கிராமங்களுக்கு 10 பொது குழாய்கள் மூலம் பைப் லைன் விஸ்தரிப்பு செய்து குடிநீர் 7,500 லிட்டர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. தனி நபருக்கு நாள் ஒன்றுக்கு சராசரியாக தற்சமயம் 37 லிட்டர் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. குறைந்த மின் அழுத்தம் ஏற்படும்பொழுது இக்கிராமத்திற்கு குடிநீர் விநியோகம் செய்வதில் பிரச்சனை எழுகிறது. இவற்றை தீர்த்து வைத்திடும் பொருட்டு ஒன்றிய பொது நிதியிலிருந்து ரூ.2.25 லட்சம் மதிப்பில் சிறு மின் விசை பம்பு அமைத்திட ஒன்றிய குழு இசைவு பெறப்பட்டுள்ளது. விரைவில் இப்பணி தொடங்கப்பட்டு முடிக்கப்படும். [ஆணையர், ஊராட்சி ஒன்றியம், கறம்பக்குடி அவர்களின் கடித எண் அ4/2504/2011, நாள்: 11–11–2011.]	நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
5	1202	திரு. எஸ். கிருஷ்ணசாமி, முன்னாள் 3வது வார்டு ஊராட்சி மன்ற உறுப்பினர், மேலூர் ஊராட்சி மன்றம், அன்னவாசல் ஒன்றியம், புதுக்கோட்டை மாவட்டம்.	புதுக்கோட்டை திருச்சி சாலை, புதுக்கோட்டையிலிருந்து 12–வது கிலோ மீட்டரில் பிரிந்து தொட்டியல், வழியாக சிப்காட் செல்லும் சாலையை உடனடியாக பழுதுபார்க்க கோருதல்.

துறையின் பதிலுரை	குழுவின் குறிப்புரை
(5)	(6)
2010–2011–ம் ஆண்டில் ஒன்றியப் பொதுநிதியில் ரூ. 5,00,000/– மதிப்பீட்டில் ஓரடுக்கு மெட்டல் மற்றும் தார் சாலை அமைக்க நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இப்பணிக்கு ஒப்பந்தப்புள்ளி முடிவு செய்யப்பட்டு பணி உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. மெட்டல் சேகரம் செய்யப்பட்ட பணி நடைபெற்று வருகிறது. இப்பணி 31–12–2011–க்குள் முடிக்கப்படும்.	குழுவின் நேரடி ஆய்வின்போது பணி நடைபெற்றுக் கொண்டிருப்பது கண்டறியப்பட்டதாலும், 31–12–2011–க்குள் பணிகள் முடிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளதாலும் நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்பட்டது.
[கூடுதல் இயக்குநர்/திட்ட இயக்குநர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, புதுக்கோட்டை அவர்களின் கடித எண் ஜி1/2385/2011, நாள்: 16–11–2011.]	

வரிசை எண்.	மனு எண்	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
6	1203	திருமதி ஆர். சிவகாமி ராஜமாணிக்கம், ஊராட்சி மன்ற தலைவர், வெள்ளாளவிடுதி, கறம்பக்குடி ஊராட்சி ஒன்றியம்.	வெள்ளாள விடுதியில் நேரடி நெல்கொள் முதல் நிலையம் திறக்க கோருதல்.

துறையின் பதிலுரை	குழுவின் குறிப்புரை
(5)	(6)
ரெகுநாதபுரம் மற்றும் வெள்ளாளவிடுதி கிராமங்களில் அறுவடை பருவம் ஆரம்பிக்கும் நோத்தில் கரீப் 2011–2012 பருவத்தில் நெல் கொள்முதல் நிலையம் 11–10–2011 முதல் திறக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.	நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்பட்டது.
[மண்டல மேலாளர், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகம், புதுக்கோட்டை அவர்களின் கடித எண் பி5/4964/2010, நாள்: 7–9–2011.]	

வரிசை எண்.	மனு எண்	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
7	1204	பொதுமக்கள் சார்பாக திரு. எம். பாபு, த/பெ. முத்துசாமி, கண்ணாரத்தெரு, இலுப்பூர் (அஞ்சல்), புதுக்கோட்டை மாவட்டம்.	இலுப்பூர் தாலுகா இலுப்பூர் பேரூராட்சி பகுதியில் உள்ள நியாய விலை கடையை பிரித்து புதிய பகுதி நேர நியாய விலை கடை அமைக்க கோருதல்.

துறையின் பதிலுரை	குழுவின் குறிப்புரை
(5)	(6)
இலுப்பூர் பேரூராட்சியில் உள்ள இலுப்பூர் 1 நியாய விலைக் கடையில் உள்ள மொத்தம் 1,162 குடும்ப அட்டைகளிலிருந்து 553 குடும்ப அட்டைகளை பிரித்து சௌராஷ்டிரா தெருவில் புதிய பகுதி நேர அங்காடி அமைக்க இவ்வலுவலக ந.க. 41131/2009/கே2, நாள்: 16-9-2011-ல் ஆணையிடப்பட்டது. புதிய பொது விநியோகத் திட்ட கடைக்கான கட்டிடத்தில் பழுதுபார்ப்பு வேலைகள் நடந்து வருகின்றன. ஒருவாரத்தில் கடை திறக்கப்பட்டு, 24-11-2011 ஆம் தேதிக்குள் செயல்படத் தொடங்கும். (மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அலுவலர், புதுக்கோட்டை அவர்களின் கடித எண் 25495/2011/கே2, நாள்: 8-9-2011.)	நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
8	1207	திரு. எ. சண்முகம் (நேரு), குளமங்கலம் வடக்கு (அஞ்சல்), கீரமங்கலம் (வழி), ஆலங்குடி வட்டம், புதுக்கோட்டை மாவட்டம்-614 624.	புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி வட்டம், குளமங்கலம் வடக்கு அரசு உயர்நிலைப் பள்ளி அருகில் புதிய மின்மாற்றி அமைத்து தரக்கோருதல்.

துறையின் பதிலுரை	குழுவின் குறிப்புரை
(5)	(6)
புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி வட்டம், குளமங்கலம் வடக்கு அரசு உயர்நிலைப்பள்ளி அருகில் புதிய மின்மாற்றி அமைக்க 30-12-2008 அன்று அனுமதி வழங்கப்பட்டிருந்தது. ஆனால் நிர்வாகக் காரணங்களினால் பணி நடைபெறவில்லை. தற்போது மேற்படி மின்மாற்றி நிறுவுவதற்கு மறு அனுமதி 12-7-2011 அன்று வழங்கப்பட்டுள்ளது. மேலும் 50 KVA/11 KV திறன் கொண்ட மின்மாற்றி வரும் 31-12-2011-க்குள் அமைத்து மின்னூட்டம் செய்யப்பட்டு சீரான மின்சாரம் வழங்கப்படும். [மேற்பார்வை பொறியாளர், புதுக்கோட்டை மின் பகிர்மான வட்டம், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம், புதுக்கோட்டை அவர்களின் கடித எண் மே.பொ.ப.மி.பவ/உ.செ.பொ/வ/முறிவ2/கோ.சபேமு/அ. எண் 421/2011, நாள்: 9-11-2011.)	புதிய மின்மாற்றி அமைக்கப்பெற்றுள்ளதால், நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
9	1211	திரு. ஆர். ஆறுமுகம் தலைவர், வர்த்தக சங்கம், மணமேல்குடி தாலுகா, புதுக்கோட்டை மாவட்டம்.	1847 குடும்ப அட்டைகள் உள்ள அமுதம் அங்காடியை இரண்டாக பிரிக்க கோருதல்.

துறையின் பதிலுரை

(5)

மணமேல்குடி அமுதம் அங்காடி 1545 குடும்ப அட்டைகளுடன் முழுநேர அங்காடியாக கீழ்க்கண்ட கிராமங்களை உள்ளடக்கி செயல்பட்டு வருகிறது.

1. வடக்கூர்	101	குடும்ப அட்டைகள்	2	கி.மீ
2. குருனாமடம்	120	„	0.2	கி.மீ
3. அக்கரகாரம்–1	173	„	0.4	கி.மீ
4. அக்கரகாரம்–2	160	„	0.3	கி.மீ
5. மணமேல்குடி வடக்கு	680	„	0.5	கி.மீ
6. மணமேல்குடி கீழக் குடியிருப்பு	250	„	2	கி.மீ
7. தண்டளை	36	„	3	கி.மீ
8. நல்லவயல்	25	„	5	கி.மீ
கூடுதல்	1,545			

மணமேல்குடியில் இயங்கும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழக சில்லரை விற்பனை கடையை இரண்டாக பிரித்து அதாவது கீழ்குடியிருப்பு கிராமம் மற்றும் அதை சுற்றியுள்ள பகுதியை சேர்ந்த 750 குடும்ப அட்டைகளை பிரித்து, புதியதாக பகுதி நேர அங்காடியை திறந்திட மேலாளர், தமிழ்நாடு நுகர் பொருள் வாணிப கழக மண்டல மேலாளர் ந.க. எண் ஆ5/4964/2010, நாள்: 17–11–2011 இல் முன்மொழிவு வரப்பெற்று மாவட்ட ஆட்சித்தலைவரின் ஒப்புதல் பெறப்பட்டது. 23–11–2011 க்குள் புதிய பகுதி நேர அங்காடி திறக்கப்படும்.

[மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அலுவலர், புதுக்கோட்டை அவர்களின் கடித எண் 25495/2011/கே2, நாள்: 8–9–2011.]

குழுவின் குறிப்புரை

(6)

அமுதம் அங்காடி பிரிக்கப்பட்டு புதிய பகுதி நேர அங்காடி செயல்பட்டு வருவதால் நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
10	1225	திரு. நா. பாலசுப்பிரமணியன், 4/775, மழையூர், கறம்பக்குடி.	மழையூர் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியின் முன்பாக வேகத்தடை அமைக்க கோருதல்.

துறையின் பதிலுரை	குழுவின் குறிப்புரை
(5)	(6)
வடவாளம்–புதுப்பட்டி சாலை மழையூரில் உள்ள ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியின் முன்பாக வேகத்தடை அமைக்கப்பட்டுள்ளது. [கோட்டப்பொறியாளர் (நெ), (கஃப) புதுக்கோட்டை அவர்களின் கடித எண் 1438, நாள்: 30–8–2011.]	நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்பட்டது.

அ.மு.பி. ஜமாலுதீன்,
செயலாளர்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS